"இழந்த உரிமைகளே தமிழர் இன்னும் பெறவில்லை"

Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

ஈழநாடு

EELANADU

தாபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 9
இதழ் 224
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க புரட்டாதி 7 ஐ ஆகிர் 18 சனிக்கிழமை [23-9- 7]

பாரதி விழாவில் பண்டிதர் கூறினர்

யாழ்ப்பாணம், சனி

'வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இன்று சிங்களமும் ஆங்கிலமும் ஆட்சி புரிகின்றன. இங்குள்ள அலுவலகங்களில்பட்டப்பகலில் விளக்கின் உதவி கொண்டுதான் தமிழைதேட வேண்டியிருக்கிறது. தமிழர்களில் பெரும்பாலோரும் தமிழ் பாராளுமன்றஉறுப்பினர்களும்இன்று அரசாங்கத துடன் ஆங்கிலத்திலேயே தொடர்பு கொள்கின்றனர். இந்த நிலைமை மாறுமளவும் தமிழர் விடுதலை பெற முடியாது.'

உருத்திரபுரம் கலாச்சார சங்கத்தினர் நடத்திய பாரதி விழாவை நேற்று ஆரம்பித்துவைத்துப் பேசிய கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் மேற்கண்டவாறு கூறினர்.

பண்டிதர் இரத்தினம் மேலும் கூறியதாவது:

இன்று தமிழர்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாகவே இந்நாட்டில் வாழ்கின்றார்கள். அவர்கள் இழந்த உரிமைகளே இன்னும் பெறவில்லை. இந்தத் தலைமுறையில் தமிழர்கள் இழந்த உரிமைகளே பெறுவார்கள் என எண்ண முடியாதிருக்கிறது.

தமிழர்கள் அரசாங்கத்திற்கு தமிழில் எழுதினால் சிங்களத்தில் பதில் கிடைக்கிறது. தாழ்வுற்ற தமிழினத்தைத் தட்டி எழுப்பி தலை நிமிரச் செய்யவேண்டியது தமிழ இளைஞர்களின் கடமையாகும்.

[8-ம் பக்கம் பார்க்க]

இலங்கை பிரஜாவுரிமை வழங்க நடவடிக்கை

இந்திரா விஜயத்தின்பின் இலங்கை சுறுசுறுப்பு

கொழும்பு, வெள்ளி

இலங்கை—இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் மூன்று லட்சம் இந்திய வம்சாவழியினருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்குவதற்கான நடவடிக்கைகளை இலங்கை விரைவில் மேற்கொள்ளவிருப்பதாகத் தெரியவருகிறது.

இலங்கை—இந்திய ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதற்கான சட்டம் இயற்றி நிறைவேற்றப்பட்டுப் பல மாதங்களான போதிலும் ஒப்பந்தத்தின் கீழ் இலங்கைப் பிரஜாவுரிமை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லையென்றும் இந்திய ஹைகமிஷன் காரியாலயம் இந்தியப் பிரஜாவுரிமை வழங்கத் தொடங்கிவிட்டதென்றும் இந்திய அரசாங்க வட்டாரங்களில் கவலை தெரிவிக்கப்பட்டுவந்தது.

இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் இலங்கை விஜயத்தின் போது இலங்கைப் பிரதமருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பயனாக இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கும்வேலைகள்விரைவில் தொடங்கவிருப்பதாகவும் பிரஜாவுரிமை கோரி மனுச் செய்யலாமென அறிவிக்கப் படவிருப்பதாகவும் அறியப் படுகிறது.

தமிழக அறிஞர்கள் இன்று யாழ். நகர்வருகின்றனர்

யாழ்ப்பாணம், சனி

தமிழக அறிஞர்கள்இன்று யாழ்ப்பாணம் வருகின்றனர். பிரபல எழுத்தாளரும் விமர்சகரும் பத்திரிகையாசிரியருமான திரு. கு. அழகிரிசாமி, மகாகவிபாரதியாரின் பேத்தியார் திருமதி விஜயபாரதி, அவரது கணவர் பேராசிரியர் திரு. சி. சுந்தரராஜன் ஆகியோர் இன்று காலை ரயிலில் யாழ்ப்பாணம் வருகின்றனர்.

இன்று அவர்கள் பருத்தித்துறையில் கவிஞர் யாழ்ப்பாணனுடன் தங்கியிருப்பார்களென்று தெரிகிறது. மாலையில் பருத்தித்துறையிலுள்ள ஆலடிப் பிள்ளையார் கோவில் முன்றலில் கதிரவேற்பிள்ளை கலாமன்ற ஆதரவில் நடைபெறவிருக்கும் இலக்கிய விழாவில் மூவரும் கலந்து கொண்டு உரையாற்றுவர். பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை இவ்வைபவத்துக்குத் தலைமை தாங்குவார்.

நாளை ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணத்தில் பல இடங்களையும் சென்று பார்வையிடுவர். நண்பகல் டாக்டர் சோ. சண்முகலிங்கம் இல்லத்தில் நண்பகல் உணவு உட்கொண்ட பின் பிற்பகலில் யாழ். நகரமண்டபத்தில் யாழ். இலக்கிய வட்டத்தினரின் இலக்கிய நண்பர் ரசிகர் சந்திப்பில் கலந்து கொள்வர்.

பண்டாரகமை இடைத் தேர்தல் இன்று நடைபெறும்

கொழும்பு, சனி

பண்டாரகமை இடைத் தேர்தல் இன்று காலை ஆரம்பமாகும். இன்றிரவு 9 மணிக்கு களுத்துறை கச்சேரியில் வாக்கு சீட்டுகள் எண்ணப்படும்.

பண்டாரகமை இடைத் தேர்தல் பிரசாரம் நேற்று முன் தினம் நள்ளிரவுடன் முடிவடைந்தது. பிரதமர் டட்லி சேனநாயக்காவும், திருமதி ஸ்ரீமா பண்டாரநாயக்காவும் நேற்று முன் தினம் இரு பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொண்டனர்.

இத் தேர்தலில் யூ. என். பி. சார்பில் திரு. ஜோர்ஜ் கொத்தலாவலையும், சுதந்திர கட்சி சார்பில் திரு. டேவிட் பெரேராவும், சுயேச்சையாக திரு. பண்டாராவும் போட்டியிடுகின்றனர்.

தரம் உயரும்

உரும்பராய், வெள்ளி

உரும்பராய் தபாற்கந்தோர் வரும் ஒக்டோபர் மாதம் தொடக்கம் தரம் உயர்த்தப்படவிருக்கிறது. இதற்கான ஆயத்தங்களை தபால் இலாகாமேற்கொண்டுள்ளது. தபால் நிலையத்திற்கான கட்டடம் ஒன்று அமைக்கும் முயற்சியில் இப்போது கவனம் செலுத்தப் படுகிறது.

கைத்தொழில் பேட்டை அச்சுவேலியில் சந்தேகம்

யாழ்ப்பாணம், சனி

அச்சுவேலியில் அமைப்பதென முடிவு செய்யப்பட்ட கைத்தொழில் பேட்டை அங்கு அமைக்கப் படமாட்டாதெனத் தெரிகின்றது. இது சம்பந்தமாக கைத்தொழில் அமைச்சைச்சேர்ந்த சில முக்கிய அதிகாரிகள் ஆராய்ந்து வருவதாகத்தெரிகிறது.

இக்கைத்தொழில் பேட்டையை அச்சுவேலியிலேயே அமைப்பதென யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாவட்ட இணைப்புக் குழுக்கூட்டத்தில் முடிவு செய்த போதும் இங்கு போக்குவரத்துவசதியின்மையாலேயே இதனை இங்கு அமைக்க கைத்தொழில் அமைச்சு விரும்பவில்லையெனத் தெரியவருகிறது. இதனை நாவற்குழிப் பகுதியில் அமைக்க அங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. (ந-தி)

புதிய பஸ்கள் வந்ததும் சேவைக்கு அழைக்கப்படுவர்

யாழ். எம். பி. க்கு அமைச்சர்உறுதி

யாழ்ப்பாணம், சனி

சென்ற வருடம் இலங்கை போக்குவரத்துச் சபையிலுல் கண்டக்டர்கள் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட யாழ்ப்பாண வாலிபர்களுக்கு இதுவரை நியமனம்வழங்கப்படவில்லையெனவும், அவர்களுடன் நேர்முகப்பரீட்சையில தெரிவு செய்யப்பட்ட மற்றும் அநேக வாலிபர்களுக்கு நியமனம் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் எனவே இவ்விசயத்தில்யாழ்ப்பாண வாலிபர்கள் புறக்கணிக்கப் பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் எம்.பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்திடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்துதிரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அமைச்சர் சுகததாசாவுடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போது இவ்வருட முடிவிற்குள் பல புதிய பஸ்கள்வந்துசேரவுள்ளதாகவும் அவை வந்ததும் யாழ்ப்பாண வாலிபர்கள் வேலைக்கு அமர்த்தப் படுவார்களெனவும் அமைச்சர் உறுதியளித்துள்ளதாகத் தெரியவருகிறது.

யாழ்ப்பாண வாலிபர்கள் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்திற்குச் செய்து கொண்ட புகாரில் தெரிவித்திருப்பதாவது:-

"சென்ற வருடம் எழுமோடு நேர்முகப் பரீட்சைக்கும் வைத்தியப் பரிசோதனைக்கும் வந்து தெரிவுசெய்யப்பட்ட சிங்கள வாலிபர்களில் அதிகமானவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டு விட்டார்கள்.

மேலும் தமிழ் எம். பிக்களுடன் இ. போ. ச. தலைமைக் காரியாலயத்திற்குச் செல்லும் தமிழ் வாலிபர்களுக்கும் வந்து தெரிவுசெய்யப்பட்ட சிங்கள வாலிபர்களில் அதிகமானவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டு விட்டார்கள்.

மேலும் தமிழ் எம். பிக்களுடன் இ. போ. ச. தலைமைக் காரியாலயத்திற்குச் செல்லும் தமிழ் வாலிபர்களுக்கும் உடனடியாக நியமனம் வழங்கப் பட்டுள்ளது. ஒருவருடமாகியும் எமக்கு ஏன் இன்னமும் நியமனம் வழங்கப்படவில்லை என்று நாம் அங்கு சென்றுகேட்ட போது உங்களுக்கு சிங்களத்தில்வேலைசெய்ய முடியுமாஎல்உடனடியாக வேலை தர முடியும். என்றுஎமக்குக் கூறப்பட்டது.

எனினும் சிங்களம் தெரியுமென்று சொன்ன வாலிபர்கள் பரீட்சிக்கப்பட்ட பின்னர் சிங்களத்தில் வேலை செய்யத் தகுதி போதாதென்றும், தமிழ்ப் பகுதிகளில் இடம் வருமபோது அழைக்கலாம் என்றும் அங்குள்ள அதிகாரி ஒருவர் கூறி எம்மைத் திருப்பி அனுப்பினர்.

[ஸ-தி]

சென்னை, செப்.22

மதுவிலக்குக் கொள்கையில் தவறு எதுவுமில்லையெனவும், அதை அமுல் நடத்துவதிலேயே சில பிழைகள் உள்ளதாகவும் தமிழக முதல் மந்திரி திரு. அண்ணாதுரை கூறியுள்ளார்.

வடபகுதி அனாதை விசாரணை

'எதிரிகள் இருவருக்கும் தலா 3 வருட கடுழியம்

யாழ்ப்பாணம், சனி

தச்சன் தோப்பு இரட்டைக் கொலை வழக்கில் எதிரிகள் இருவருக்கும் தலா மூன்று வருட கடுழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு வட பகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வி. மாணிக்கவாசகர் முன்னிலையில் நேற்றுக்காலை இரண்டாவது தினமாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணை நடுவில் எதிரிகள் கொலைக் குற்றமாகாத கைமோசக் கொலைக் குற்றத்தை ஒப்புக்கொண்டதை தொடர்ந்து நீதியரசர் தீர்ப்பு வழங்கினர்.

இவ்வழக்கில் தச்சன் தோப்பில் 66-ம் ஆண்டு ஜூன்மாதம் 12-ம் தேதி கந்தையா சச்சிதானந்தன், சிவஞானம் ஆகிய இருவரும் நாகேசு சதாசிவம், சதாசிவம் சுபாஸ் சந்திரபோஸ் ஆகிய இருவரையும் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

1-ம்எதிரி சார்பில் அட்வகேட்ஜே. பி.சொரிபிமும் 2-ம் எதிரி சார்பில் அட்வகேட் கே.வி.எஸ். சண்முகநாதனும், புறக்டர் எஸ் அமிர்தலிங்கத்தின் அனுசரணையுடன் ஆஜராகினர்கள். எதிரிகளுக்காக அரசாங்கத்தால் அட்வகேட் எஸ். ஸ்ரீநிவாசன் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் கே. இரத்தினேசர் ஆஜராகினர்.

அசைஸ் விசாரணை மீண்டும் 27-ம் தேதி காலை ஆரம்பமாகும். இதற்கான ஆயத்தங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரம்

அறிவித்தல்

கிளி நொச்சியிலுள்ள எனக்குச் சொந்தமான "யாழ் ஸ்ரோர்ஸ்" என்ற கடையில் மனேஜராக இருந்த திரு. எஸ். பி. இராஜரத்தினம் என்பவர் 31-8-67-ந் திகதி முதல் கடையிலிருந்து விலகிவிட்டார் என்பதை இத்தால் அறிவிக்கின்றோம்.

என், மனவேற்பிள்ளை,
யாழ்ஸ்ரோர்ஸ்,
239 கிளிநொச்சி.

காரைநகரில் தரணை

யாழ்ப்பாணம், சனி காரைநகரில் தோப்புக் காடு — புன்னலைக்கோதை என்னும் இடத்திலிருந்து களபூமி கடற்கரை முனை வரைக்கும் நீண்ட நீர் அணை ஒன்றைக் கட்டி அப் பகுதிக்குள் பெய்யும் மழை நீர் கடலில் சென்று வீணாகாமல் தடுத்துவைப்பதன் மூலம் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கவும், விவசாயத்தை விருத்திசெய்யவும் பயன்படும் திட்ட மொன்றை உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம் பிள்ளை ஆராய்ந்துவருகிறார்.

இதுசமயந்தமாக திரு. முருகேசம்பிள்ளை காரைநகர் நலன்புரிச் சங்கத்தின் ஆதரவுடன் மேற்குறிப்பிட்ட இடங்களைச் சென்று பார்வையிட்டார். [வி. நி.]

புனித செபமாலை மாதா திருநாள்

யாழ்ப்பாணம், சனி கொழும்புத்துறை புனித செபமாலை மாதாவின் வருடாந்த மகோற்சவம் இன்று சனிக்கிழமை காலைகொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. மாலையில் ஆராதனைகள் நடைபெறும்.

30-ம் திகதி மாலை தேவ நற்கருணை சுற்றுப்பிரகாரமும் 1-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை பெரிய பாடற்பூசையும், புனித செபமாலை மாதா சுற்றுப் பிரகாரமும் நடைபெறும். [வி. நி.]

பிரிவுபசாரம்

அச்சுவேலி, வெள்ளி அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையில் பல வருடங்களாக உதவி ஆசிரியராகவும் பின்னர் தலைமையாசிரியராகவும் கடமையாற்றி அண்மையில் இடமாற்றலாகி வேறு பாடசாலைக்குச் சென்ற திரு. திரு. கி. மயில்வாகனத்துக்கும் உதவியாசிரியையாகக் கடமையாற்றிய அவரது மனைவியாருக்கும் மேற்படி பாடசாலை மண்டபத்தில் ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் ஒரு பிரிவுபசாரம் நடாத்தப்பட்டது. திரு. மயில்வாகனம் பாடசாலைக்கும் கிராமத்துக்கும் ஆற்றிய சேவைகள் பற்றி வைபவத்துக்குத் தலைமை தாங்கிய பாடசாலையின் சீரேஷ்ட உதவியாசிரியர் திரு. க. சுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி விடுமுறைதினங்களில் 2-30
ஜெமினி - பத்மினி
நடித்த
வஞ்சிக் கோட்டை வாலிபன்

மனோஹரா
[யாழ்ப்பாணம்]
தினசரி பி.ப. 6-30 9-45
போயாதினங்களில் 3 காட்சி
லாலாஜ்
LALACH
[Hindi Thriller]

வரி விளம்பரம்

விற்பனைக்கு

ஒஸ்டின் 55 1 Sri 7965. உன்னத நிலையில் உள்ளது. 3500 ரூபாவுக்கு புதுப்பிக்கப்பட்டது. பார்வை 24, 25 திகதிகளில். டாக்டர் வே. கிருஷ்ணராசா, புலோலி கிழக்கு, பருத்தித்துறை. 2380

யந்திரம்:

நல்ல நிலமையில் உள்ள சகல தளபாடங்களுடன் 16 கோஸ்பவர் பெட்ரோல் நெல் குத்தும் யந்திரம் விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு: மணியம் இஸ்டோர், வட்டாரம் 1, புங்குடுதீவு. 2378

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

REGAL JAFFNA
Times 4-45 7-00 p. m.
9-45 p. m.
Stuart Whitman
Wende Wagner
in
20th Century Fox's
RIO CONCHOS
Cinemascope

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA.
Daily at 4-45, 7-00 & 9-45
PSYCHO

3-வது வெற்றி வாரம்!
கெபிடல் [கொட்டாஞ்சேனை] பிளாஸா [வெள்ளவத்தை] விஜயா [மட்டுநகர்]
விஜிதா [ஹட்டன்] மொடர்ன் [பதுளை] ஸ்ரீகிருஷ்ணா [திருமலை]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
புதுமையான கதை! உணர்ச்சிமிக்க வசனம்!
காதற்கினிய பாடல்கள்!
முழுவதும் ஒரு ஹாஸ்ய விருந்து!
ஜெய்சங்கர், ரவிச்சந்திரன், நாகேஷ், விஜயலட்சுமி, ரத்னா, மாதவி
நடித்த

நாம் மூவர்
டைரக்ஷன்: ஜம்பு
பாடல்கள்: வாலி
இசை: எம்.எம்.எஸ்.
கடைசி சிலதினங்கள் கிங்ஸ்லி [கொழும்பு]
மற்றும் 5 திரைகளில்
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி நடித்த
அன்பே வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மா எதிர்ப்புத் தலைவர் ஒருவர் உடன்கொலை

பீகிங், செப். 22

மா எதிர்ப்புக்குத் தலைமை தாங்கிய ஒருவர், ஒரு பொதுச்சதுக்கத்தில் நடைபெற்ற பகிரங்க விசாரணையில், மரணதண்டனை விதிக்கப்பட்டதாக ஷாங்காய் ரேடியோ அறிவித்துள்ளது.

அவர் அந்த இடத்திலேயே உடனே கொலைப்பட்டார்.

எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காகவும், செங்காவலரை அடித்ததற்காகவும் மற்றும் 13 பேர், சிறைத்தண்டனை விதிக்கப்பட்டனர்.

அமெரிக்க வெளியுறவு மந்திரி டூன் ரஸ்கின் ஒரே மகள்

நீக்ரோவை மணம் புரிந்தார்

வாஷிங்டன், செப். 22

அமெரிக்க வெளியுறவு மந்திரி திரு. டூன் ரஸ்கின் ஒரே மகளான மார்கரெட், நேற்று ஒரு நீக்ரோப் பேராசிரியரைத் திருமணம்செய்து கொண்டார்.

இத் திருமணம் கலிபோர்ணியாவில் நடந்தது. மணப்பெண் மார்கரெட்டுக்கு 18 வயது. மணமகனுக்கு 22 வயது.

தமது மகளை மணமகனிடம் திரு. டூன் ரஸ்க் கையளித்தார்.

ரஷ்யாவில் குழந்தை நூல்கள்

மாஸ்கோ, செப். 22

குழந்தைகளுக்கென சோவியத் யூனியனில் 100 பதிப்பகங்கள் நூல்களை வெளியிடுகின்றன. இந்நூல்கள் சோவியத் மக்களின் 70 மொழிகளில்அச்சிடப்படுகின்றன ஆண்டுக்கு2000லட்சம் நூல் பிரதிகள் வெளியிடப்படுகின்றன.

கொச்சினில் இந்திரா காந்தி

கொச்சின், செப். 22

இலங்கைக்கு விஜயம் செய்துவிட்டு, இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி நேற்றிரவு கொச்சின் வந்துசேர்ந்தார். கப்பலிலேயே அவர் இரவைக் கழித்தார்.

அவர், இந்திய கப்பற்படையின் பயிற்சி அணி வகுப்புகளை இன்று பார்வையிடுகிறார் இந்தியகடற்படையின் பயிற்சி அணி வகுப்புகளை அவர் உத்தியோகபூர்வமாகப் பார்வையிடுதல் இதுவே முதற்தடவையாகும்.

வல்லரசு வெளியுறவு மந்திரிகள் நியூயோர்க்கில் கூடுகின்றனர்

உலகப் பிரச்னைகளை விவாதிப்பர்

நியூயோர்க், செப். 22

அமெரிக்கா, சோவியத் யூனியன், பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் வெளியுறவு மந்திரிகள், அடுத்த செவ்வாய்க்கிழமை நியூயோர்க்கில்கூடி, உலகப் பிரச்னைகளை விவாதிப்பர்.

ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்ட் அளிக்கும் விசேஷ இரவு போசனவிருந்தொன்றில் அவர்கள் கலந்து கொள்வார்கள்.

யுதாண்ட் யோசனை பரிசிலிக்கப்படும்

வெளியுறவு மந்திரிகள் கூட்டத்தில், சர்வதேசப் பிரச்னைகளைத் தீர்க்குமுகமாக வெளியுறவு மந்திரிகள் கூட்டத்தில் இரகசிய பந்தோபஸ்து கூட்டங்கள் நடத்தவேண்டுமென்ற யுதாண்டின் ஆலோசனை பரிசிலனைக்கு எடுக்கப்படும் என ஐ. நா. அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வியட்னும் மேற்கு ஆசிய விவகாரங்கள் பற்றியும் வெளியுறவுமந்திரிகள் தமது சந்திப்பின்போது விவாதிக்கலாம் எனவும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

சோவியத் ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய மூன்று நாடுகளினதும் வெளியுறவு மந்திரிகள் ஏற்கனவே நியூயோர்க் வந்துள்ளனர்.

அமெரிக்க ராஜாங்க வெளியுறவு மந்திரி திரு. டூன் ரஸ்க, ஞாயிற்றுக்கிழமையன்று நியூயோர்க் வந்து சேருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

கப்பலுக்கு ராணியின் பெயர்

லண்டன், செப். 22

இதுவரை 'கியூ 4' என்றழைக்கப்பட்டுவந்த புதிய குளுட் உல்லாசக்கப்பலுக்கு நேற்று 'இரண்டாம் குவீன் எலிசபெத்' என்று நாமகரணம் சூட்டப்பட்டு, அரசியால் கடலில் விடப்பட்டது இப்பெயர் கடைசி நேரத்திலேயே தேர்ந்தெடுக்கப்பட்டமையால் அது இக்கப்பலில் பொறிக்கப்பட்டிருக்கவில்லை.

கடந்த 27 வருடங்களில் பிரிட்டனில் அமைக்கப்பட்ட கப்பல்களில் இதுவே மிகப் பெரியதாகும்.

பீஹாரில்

வெள்ளத்துக்கு 14 பேர் பலி

பட்னா, செப். 22

பீஹாரில் நேற்று முன்னம் பெய்த கடும் மழை இப்போது தணிந்துவிட்டது மெல்லிய சூரிய வெளிச்சத்தை நேற்று அங்கு காணமுடிந்தது.

கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தில், பட்னாவிலும் கயாவிலும் இடிபாடுகளில் அகப்பட்டு இறந்தவர்கள் தொகை 14 என அறிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவுக்கு ஐ. நா. வில் இடமளிக்கும் விவகாரம்

அட்டவணையில் சேர்க்க ஆயத்தக்கமிட்டி சிபார்சு

நியூயோர்க், செப். 22

சீனாவுக்கு ஐ. நா. பொதுச்சபையில் இடம் அளிக்கும் விவகாரம், சபையின் விஷய அட்டவணையில் சேர்க்கப்படவேண்டுமெனச் சபையின் ஆயத்தக்கமிட்டி சிபார்சு செய்துள்ளது.

இதை போர்மோஸாப் பிரதிநிதி எதிர்த்துப் பேசினார். சீனாவுக்கு ஐ. நா. சபையில் அங்கத்துவம் அளிப்பது பற்றி போர்மோஸா தொடர்ந்து எதிர்த்து வருவதைப் போர்மோஸாப் பிரதிநிதி சபையில் மீண்டும் வலியுறுத்தினார்.

சோவியத் பிரதிநிதி

சோவியத் பிரதிநிதி திரு. பெடரென்கோவ் பேசுகையில், போர்மோஸாவை ஐ. நா.விலிருந்து நீக்கிவிட்டு அதனிடத்தில் சீனாவை அமர்த்தும்ஆலோசனையைத் தெரிவிக்கும் எந்தவொரு தீர்மானத்தையும் ரஷ்யா ஆதரிக்குமென்று கூறினார்.

அமெரிக்க பிரதிநிதி

ஐ. நா.வில் சீனாவை அமர்த்தும் விவகாரம் சபையின் விஷயஅட்டவணையில் சேர்க்கப்படுவதையிட்டுத் தமக்கு எவ்வித ஆட்சேபமும் கிடையாது என்று அமெரிக்கப் பிரதிநிதி திரு. கோல்ட் பேர்க் கூறினார். ஆனாலும், அது பற்றிய புதிய விவாதம் ஏதாவது பயன் தருமா என்பதில் தமக்குச் சந்தேகமே என்றார் அவர்.

அமெரிக்க ஜலவாயு பாதுகாப்பு அரண் சீனா கண்டனம்

பீகிங், செப். 22

ஜலவாயு ஏவுகணை எதிர்ப்பு அரண் ஒன்றை அமெரிக்கா நிறுவத்திட்டமிட்டிருப்பதையிட்டுச் சீனா, அமெரிக்காவைக் கண்டித்துள்ளது. எதிர்ப்பு அரண் நிறுவும் திட்டம், பீகிங் மீது தொடுக்கப்படும் ஜலவாயுப் பயமுறுத்தலே எனச் சீனா வர்ணித்துள்ளது.

பகல் திருட்டு

உடுப்பிட்டி, வெள்ளி

பாடசாலை சென்ற ஆசிரியை ஒருவரின் வீட்டில்பட்டப்பகலில் துணிகரத் திருட்டு நடைபெற்றுள்ளது கரவெட்டிவடக்கு, வதிரி யென்ற இடத்தைச் சேர்ந்த ஆசிரியையான திருமதி பீ. பாக்கியம் என்பவரி வீட்டைப் பூட்டிவிட்டுப் பாடசாலைக்குச் சென்றிருந்த சமயம் இனந்தெரியாத நபர்கள் வீட்டினுள் புகுந்து சுமார் 3000 ரூபா பெறுமதியான 18 தங்க பவுண்நகைகளையும்1300ரூபா ரொக்கத்தையும் திருடிச் சென்றுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இத்திருட்டு சம்பந்தமாக சந்தேகத்தின்மீது நான்கு பேரைக் கைதுசெய்து பின்னர் பிணையில் விடுதலை செய்துள்ளனர். பருத்தித்துறைப் பொலிசார் தொடர்ந்து புலன் விசாரணைசெய்து வருகின்றனர்.

கோழிக் களவு

புன்னாலைக்கட்டுவன், வெள்ளி

ஊரெழுப்பகுதியில் சில தினங்களாக இரவு நேரங்களில் கோழிகள் களவு போவதாகத் தெரிகிறது.

சூயஸ் கால்வாய் பகுதியில் நேற்று நடைபெற்ற சண்டை

24 இஸ்ரேலியர் கொலை

செய்யப்பட்டதாக ஐ. அ. கு. அறிவிப்பு

கெயிரோ, செப். 22

சூயஸ்கால்வாய் பகுதியில் உள்ள அல்கும் தரா மாவட்டத்தில் நடைபெற்ற சண்டையொன்றில், 23 இஸ்ரேலியரைக் கொன்றதாகக் கெயிரோவில் வெளியாகும் அதிகாரபூர்வமான பத்திரிகை 'அல் அஹ்ராம்' தெரிவித்துள்ளது. இச் சம்பவம் நேற்று நடைபெற்றதாக அது கூறியது.

இச் செய்தியை மறுத்த இஸ்ரேல், தன் பக்கத்தில் 5 பேர் மட்டுமே கொல்லப்பட்டதாகவும், மற்றும் 4 பேர் காயப்பட்டதாகவும் அறிவித்துள்ளது.

இஸ்ரேல் முதலில் தாக்கியது

இஸ்ரேல் துருப்புகளே முதலில் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாகவும், அதற்கு 2 சிவிலியன்கள் பலியாகியதாகவும் ஐ. அ. குடியரசு தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் தாக்குதலை அடுத்துத் தாம் திருப்பிச் சுட்டதில், 8 இஸ்ரேலிய டாங்கிகள், 2 கவச வண்டிகள் மற்றும் பார்வை நிலையங்களை நாசப்படுத்தியதாக ஐ. அ. குடியரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஒரு மணி நேர சண்டை

ஐ. அ. குடியரசு முதலில் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாகக் கூறிய இஸ்ரேல், துப்பாக்கிச்சண்டை ஒரு மணி நேரத்துக்கு நீடித்ததாக அறிவித்தது.

குண்டுவீச்சை அமெரிக்கா நிறுத்தினால் வடவியட்னும் என்ன செய்யும்?

ஐ. நா. சபைக் கூட்டத்தில் அமெரிக்கப் பிரதிநிதி கேள்வி

நியூயோர்க், செப். 22

வடவியட்னும் மீது அமெரிக்கா குண்டு வீசுவதை நிறுத்தினால், அதன் மூலம் அப்பகுதியில் சமாதானம் ஏற்படுமென்பதற்கு வடவியட்னாமினால் ஏதாவது பிரத்தியட்சமான அறிகுறி கிடைக்குமாவென அமெரிக்கப் பிரதிநிதி திரு. கோல்ட் பேர்க், நேற்று ஐ. நா. பொதுச்சபைக் கூட்டத்தில் பேசுகையில் வடவியட்னாமைக் கேட்டார்.

அப்படி அமெரிக்கா, குண்டு வீச்சை நிறுத்தும் பட்சத்தில், வியட்னாமில் சமாதானத்தை ஏற்படுத்த வடவியட்னாமுக்குச் சாதகமாகவுள்ள அதன் நடவடிக்கைகளை எடுக்குமென்பதைத் தாம் அறிய விரும்புவதாகவும் திரு. கோல்ட் பேர்க் கூறினார்.

வியட்னாமில் அமைதியை நிலைநாட்டுவதற்காகச் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு அரசியல் தீர்வையும் அமெரிக்கா ஏற்கத் தயாராகவுள்ளதாகத் திரு. கோல்ட் பேர்க் குறிப்பிட்டார்.

மேற்கு ஆசியா பற்றி அவர் குறிப்பிடுகையில், சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும், சமாதானத்துக்குத் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று திரு. கோல்ட் பேர்க் கேட்டுக்கொண்டார். சமரசமுயற்சி எதுவையும் அவர்கள் நிராகரித்துவிடக்கூடாது என்றும் அவர் கூறினார்.

இந்திய

பார்லிமெண்ட் தூதுகோஷ்டி அவுஸ்திரேலியா செல்கிறது

புதுடில்லி, செப். 22

எட்டு அங்கத்தவர்களைக் கொண்ட இந்திய பார்லிமெண்ட் தூதுகோஷ்டி ஒன்று அவுஸ்திரேலியா செல்லவிருக்கிறது.

அடுத்த மாதம் 26-ந் திகதி தொடக்கம் நவம்பர் மாதம் 7-ந் திகதி வரை இத்தூதுகோஷ்டி அவுஸ்திரேலியாவில் தங்கியிருக்கும். அவுஸ்திரேலியபார்லிமெண்டின் அழைப்பை ஏற்றுஅங்கு செல்லும் இத்தூதுகோஷ்டிக்கு இந்திய லோக்சபை சபாநாயகர் திரு. சஞ்சீவ ரெட்டி தலைமை தாங்குவார்.

குண்டு வெடித்து 2 மாணவர் மரணம்

ஜெய்ப்பூர், செப். 22

ராஜஸ்தானில் ஆஜ்மீர் அருகே நாகிராபாத்தில், ஒரு வெடிகுண்டு வெடித்து இரு மாணவர்கள் உயிரிழந்தனர்.

வெடிக்காமலிருந்த வெடிகுண்டை வைத்து 6 மாணவர்கள் பரிசோதித்துக்கொண்டிருந்தபோது அது வெடித்து அந்த இடத்திலேயே ஒரு மாணவர் உயிரிழந்தார். மற்றொரு மாணவர் ஆஸ்பத்திரியில் மரணமானார். மற்றும் 4 மாணவர்கள் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸார் புலன்விசாரணை நடத்துகின்றனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

கடவுளிடம்நம்பிக்கை உடையவன் சுயமரியாதையை அடைகிறான். கடவுளிடம் நம்பிக்கை இல்லாதவனுக்கு உரிமை என்பது இன்னதெனத் தெரியாது. நல்லது செய்வது எப்படி என்பது அவனுக்குத் தெரியாதென்பதே எனது திடமான நம்பிக்கை — மகாத்மாகாந்தி

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க ஞு புரட்டாதி ௴ 7உ (23-9-67)

பயனுள்ள விஜயம்

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி இலங்கையில் நான்கு தினங்கள் தங்கியிருந்து இலங்கை மக்களின் நல்லெண்ணத்தையும் அன்பையும் அபரிமிதமாகப் பெற்றுக்கொண்டு தாயகம் திரும்பியிருக்கிறார். இலங்கையில் கொழும்புக்கும் கண்டிக்குமே அவர் சென்றாராயினும் நாட்டின் சகல பகுதியிலுள்ள மக்களும் திருமதி இந்திராவை மனதார வரவேற்று மானசிகமாக வாழ்த்தினார்கள் என்று நிச்சயமாகச் சொல்லலாம்.

இந்தியப் பிரதமர் குறிப்பாக எந்தப்பிரச்னை பற்றியும் பேசுவதற்காக இங்கு வரவில்லை. நட்புறவும் நல்லெண்ணமும் தான் அவரது விஜயத்தின் நோக்கம். அந்த நோக்கம் வெற்றிபெற்றுவிட்டது என்று கூறலாம். ஆயினும் இலங்கையில் உள்ள இந்திய வம்சாவழியினர் சம்பந்தப்பட்ட இலங்கை—இந்திய ஒப்பந்த அமுல், இரு நாடுகளுக்குமிடையிலான பொருளாதார, வர்த்தக ஒத்துழைப்பு, சர்வதேசப் பிரச்னைகள் சம்பந்தமாக இரு நாடுகளும் பின்பற்றும் கொள்கை ஆகியவை பற்றி இலங்கைப் பிரதமருடன் இந்தியப் பிரதமர் பேச்சுவார்த்தை நடத்தினார். பல விஷயங்களிலும் இருநாட்டுத் தலைவர்களும் ஒருமித்த கருத்துக்கொண்டுள்ளனர். இரு தலைவர்களும் கைச்சாத்திட்டு வெளியிட்ட கூட்டறிக்கையில் இது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

தேயிலை மற்றும் இரு நாடுகளின் விளைபொருள் உற்பத்திப் பொருள்கள் பற்றியும் அவற்றின் விலைகளில் வீழ்ச்சி ஏற்படுவது பற்றியும் ஆராய்ந்த இரு நாட்டுத் தலைவர்களும், இவை பற்றி இரு நாட்டு அதிகாரிகளும் நிபுணர்களும் பரிசிலனை செய்ய விட்டுள்ளனர். அதிகாரிகளும் நிபுணர்களும் இருநாடுகளின் உற்பத்திப் பொருள்களின் விலை வீழ்ச்சியைத் தடுக்கத் தகுந்த ஆலோசனை கூறுவதுடன் இருநாடுகளுக்குமிடையில் நெருங்கிய வர்த்தக, பொருளாதார ஒத்துழைப்புக்கும் வழிவகுத்துக் கொடுப்பது நல்லது.

இலங்கை—இந்தியப் பிரதமர்களின் பேச்சுவார்த்தைகள் உடனடியாகப் பெரும் பயன் எதையும் கொடுக்கவில்லையெனச் சிலர் கூறலாம். ஆனால் இரு நாடுகளுக்குமிடையில் நெருங்கிய நட்புறவையும் ஒத்துழைப்பையும் ஏற்படுத்துவதைவிடப் பெரும் பயன் வேறு என்ன இருக்க முடியும். இதுதவிர இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினர் பிரச்னைக்கே இச்சந்திப்பு ஒரு நல்ல முடிவு கட்டிவிட்டது. இனி யார்தான் என்ன சொல்வதற்கு இருக்கிறது?

இலங்கை—இந்திய நட்புறவுச் சங்கம் திருமதி இந்திரா காந்திக்கு அளித்த வரவேற்புபசாரத்தில் திருமதி இந்திராவையும், சங்கத்தலைவரும் செனட்சபைத தலைவருமான திரு. ஏ. ரத்தினயக்கா ஆகியோரையும் காணலாம்.

'எம். ஜி. ஆர்., ராதாவின் இரத்தக்கறைபடிந்த உடைகள் அகற்றப்படவில்லை'

மீண்டும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட டாக்டர் தெரிவித்த மறுப்பு

சென்னை, செப். 22

கடந்த ஜனவரி 12ந் தேதி இரவு, ராயப்பேட்டை ஆஸ்பத்திரியிலிருந்து ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்படமுன், எம்.ஜி.ஆர் - எம். ஆர். ராதா இருவரினதும் இரத்தக்கறை படிந்த உடைகள் அகற்றப்பட்டதென்பதை ராயப்பேட்டை ஆஸ்பத்திரியைச் சேர்ந்த வைத்திய அதிகாரி டாக்டர் கே. விசுவலிங்கம் மறுத்தார்.

சென்ற புதன்கிழமை, எம். ஜி. ஆர்.-எம். ஆர். ராதா துப்பாக்கிச் சூட்டு வழக்கு, சென்னை செஷன்ஸ் நீதிமன்றத்தில் விசாரணைக்கெடுக்கப்பட்டபோது எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க டாக்டர் கே. விஸ்வலிங்கம் மறு குறுக்குவிசாரணைக்கு அனுமதிக்கப்பட்டார். அப்போது ராதாவின் வழக்கறிஞரான திரு. நடராஜன் கேட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே டாக்டர் விசுவலிங்கம் மேற்கண்டவாறு மறுப்புத் தெரிவித்தார்.

எம். ஜி. ஆர். எம். ஆர். ராதா ஆகியோருக்குச் சிகிச்சையளிப்பதில் தமக்கு உதவிசெய்த வைத்திய உதவியாளரான கமலநாதன், புலன்விசாரணைகளுக்கு இரத்தக்கறைகள் பயன்படுத்தப்படும் என்பதை உணர்ந்து, இரத்தக்கறை படிந்த உடைகளை அவர்கள் இருவரிடமிருந்தும் அகற்றினாரென்பதையும், நோயாளிகளுடன் சேர்த்து அந்த உடைகளை வெவ்வேருக ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு அவர் அனுப்பினாரென்பதையும் டாக்டர் விசுவலிங்கம் மறுத்தார்.

ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்கு வந்த அதே இரத்தக்கறை படிந்த உடைகளுடனேயே எம். ஜி. ஆரும், எம். ஆர். ராதாவும் ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டதாக டாக்டர் விசுவலிங்கம் கூறினார்.

புரொஸிகியூஷனின் தேவைக்கேற்ப உடைகள் அகற்றப்படவில்லை என அவர் வேண்டுமென்றே பொய் கூறுவதென்பதை அவர் மறுத்தார்.

ராதாவின் மீதான துப்பாக்கிக் குண்டுக்காயங்கள் பற்றி அவர் குறிப்பிடுகையில், வலது நெற்றிப் பொட்டுப் பகுதியிலல்லாது அடுத்திருந்த காயத்திலேயே தாம் தீப்பொறி பட்ட அடையாளங்களைக் கண்டதாக டாக்டர் விசுவலிங்கம் கூறினார்.

இந்தக் கேள்விக்குப் பதிலளித்துவிட்டு, தமது அவதானிப்புகள் பதிவுசெய்யப்பட்ட விபத்துப் பதிவுப்புத்தகத்தைப் பார்வையிடச் விருப்பம் தெரிவித்தார்.

பதிவுப் புத்தகத்தின் உதவியின்றியே கேள்வியைச் சாட்சி ஏற்கனவே பதிலளித்து விட்டபடியால், அவருடைய ஞாபகத்தைப் புதுப்பிக்க அது தேவையில்லையென ராதா வழக்கறிஞர் நடராஜன் குறிப்பிட்டார்.

வாதிதரப்பு வழக்கறிஞர்: அந்தக் கேள்விக்குப் பதிலளிக்கப் பதிவுப் புத்தகம் சாட்சிக்கு அளிக்கப்பட்டதென்பதைக் கனம் நீதிபதியவர்கள் பதிவுசெய்துகொள்ளவேண்டும்.

நீதிபதி: பதிவுப் புத்தகமின்றிச் சாட்சிக்குக் கேள்வியைப் பதிலளிக்கமுடியாவிடின், சாட்சி நீதிமன்றத்தின் உதவியை நாடலாம்.

எம். ஜி. ஆர்., எம். ஆர். ராதா இருவரையும் தாம் ஜனவரி 12ந் தேதியிலேயே சோதித்தபோதும், ஜனவரி 13ம், 14ம் தேதிகளிலும் ராதாவின் கழுத்துக் காயத்தில் தீப்பொறி பட்ட குறிகள் இருந்ததைத் தாம் நினைவுகூர்ந்ததாக டாக்டர் விசுவலிங்கம் கூறினார்.

ஜனவரி 14ந் தேதியன்று பொலீசாரிடம் ஒப்புவித்த வாக்குமூலத்தில், ராதாவின் காயங்கள் கடும் சாம்பல் நிறமாக இருந்ததாகவும் காயங்களைச் சுற்றித் தீப்பொறி பட்ட குறிகள் இருந்ததாகவும் தாம் பொலீசாரிடம் கூறியதென்பதைச் சாட்சி மறுத்தார்.

துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுக்கும் தீப்பொறிபட்ட குறிகளுக்குமிடையேயான தொடர்பு பற்றித் தமக்குத் தெரியுமெனச் சாட்சி கூறினார்.

ராதாவின் தலைக் காயத்தில் தாம் தீப்பொறி பட்ட குறிகள் எதையும் காணவில்லையாதலால், அதற்கு மாறாகத் தாம் பொலீசுக்கு ஏதும் கூறியிருக்கும் சந்தர்ப்பங்கள் கிடையாதெனச் சாட்சி மேலும் கூறினார்.

மருத்துவக் கல்லூரியில் சாட்சியின் பாடங்களில் சட்ட வைத்தியமும் ஒரு பகுதியாகுமென்று சாட்சி கூறினார். மருத்துவ மாணவர்களுக்கான பரீட்சைகளில், பின்னர் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கும் நோக்கத்துடன் 'காயத்தை' மாணவர்கள் பரிசோதிக்க வேண்டுமென வலியுறுத்தப்படுவதாகவும் டாக்டர் விசுவலிங்கம் குறிப்பிட்டார்.

இவ்விதம் குறிப்பிட்டுவிட்டு, சட்ட வைத்தியம், சட்டம், வைத்தியம் பற்றிய பல முக்கிய அதிகாரங்கள் அடங்கியதாகுமென்று டாக்டர் விசுவலிங்கம் நீதிமன்றத்துக்கு விளக்கினார். "அந்த அதிகாரங்களையிட்டு எமக்கு நடைமுறை அறிவு எதுவும் இல்லாததால், நாம் அவற்றை பரீட்சைகளுக்கு மட்டும் படித்துவிட்டுப் பின்னர் அவற்றை மறந்துவிடுகிறோம்" என்றார் அவர்.

விபரங்கள் குறிக்காத காரணம்

காயத்தைப் பரிசோதித்தபோது, குறிப்பிடத்தக்கதாக விளங்கியதையே தாம் அவதானித்ததாக டாக்டர் கூறினார். அத்துடன் எம். ஜி ஆர்., எம். ஆர். ராதா மீதான காயங்களைத் தாம் மேலோட்டமாகப் பார்வையிட்டதாகவும் அவர் தெரிவித்தார். தாம் அவற்றை ஒப்பரேஷன் தியேட்டர் லைட்டின் கீழ் பரிசோதிக்கவில்லையெனவும், பூதக்கண்ணாடி தானும் தாம் பாவிக்கவில்லையென்றும், ஆகவேதான் தாம் விபத்துப் பதிவுப்புத்தகத்தில் விபரங்களைக் குறிக்கவில்லையென்றும் டாக்டர் விசுவலிங்கம் மேலும் சாட்சியமளிக்கையில் கூறினார். எம். ஜி. ஆர்., எம். ஆர். ராதா இருவரைப்பொறுத்தமட்டிலும், தீப்பொறிபட்ட குறிகள் கண்ணுககுப் புலப்படக்கூடியனவாகவே அமைந்திருந்ததெனவும் அவர்தெரிவித்தார்.

அனுபவம் இல்லை என்பதற்கு மறுப்பு

ராதாவின் தலைக்காயத்தைச் சுற்றியிருந்த தீப்பொறிபட்ட குறிகளைச் சாட்சி கவனிக்காதுவிட்டது, துப்பாக்கிக்குண்டுக் காயங்களை பரிசோதிப்பதில் அவருக்கு அனுபவமில்லாத காரணத்தினாலேயே என்பதைச் சாட்சி மறுத்தார்.

தாம் தீப்பொறிபட்டகுறிகளைக் கண்டதெனக்கூறிய போது, பொதுப்படையாக மூன்று காயங்களும் பற்றித் தாம் குறிப்பிடவில்லையெனச் சாட்சி கூறினார்.

சாட்சி, ராதாவின் இரண்டு காயங்களிலும் தீப்பொறிபட்ட குறிகளைக் கண்டதாகவும், ஆனால், வைத்திய நிபுணரும் புராசிக்கியூஷன் தரப்பு சாட்சியுமான டாக்டர் சி. பி. கோபாலகிருஷ்ணன் கூறியதன்படி பார்க்கையில், அப்படித் தீப்பொறிபட்ட குறிகள் இருப்பது என்பது புராசிக்கியூஷன் தரப்புக்குப் பாதகமாக அமையுமென்ற காரணத்தால், ராதாவின் தலைக்காயத்தில் தீப்பொறிபட்ட குறிகள் உள்ளதென்பதை மறுக்கும்படி சாட்சி சொல்லிக்கொடுக்கப்பட்டுள்ளார் என்ற ராதாதரப்பு வழக்கறிஞர் கருத்தைச் சாட்சி மறுத்தார். ———

கௌரவிக்கப்படுவார்

புன்னாலைக்கட்டுவன், வெள்

இலங்கையின் சிறந்த விஞ்ஞான ஆசிரியராக யுனெஸ்கோ ஸ்தாபனத்தால் விருது வழங்கப்பட்ட, வல்வெட்டித்துறை சிதம்பராக கல்லூரி முன்னாள் விஞ்ஞான ஆசிரியரும், தற்போதைய விஞ்ஞான பாடசாலைபரிசோதகருமானதிரு. எம். அற்புதநாதனைக் கௌரவிக்கும் முகமாக இம்மாத இறுதியில் வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்கம் ஒரு வரவேறபுக் கூட்டம் நடாத்தவிருக்கிறது.

இக் கூட்டத்தில் சகல தமிழ் எம்பிக்களும், கல்விப் பகுதி மேலதிகாரிகளும் கலந்து கொள்ளவிருப்பதாகவும் தெரியவருகிறது.

'இலங்கையின் நாம் மறந்

இலங்கை-இந்திய நட்புறவுச் சங்கத்தினால் கொழும்பு காலிபேஸ் ஹோட்டலில் இந்தியப் பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்திக்கு இம்மாதம் 18ந் திகதி பிற்பகல் அளிக்கப்பட்ட வரவேற்புபசாரத்துக்கு அவர் பதிலளித்துப் பேசிய பேச்சு இங்கு தொகுத்துத் தரப்படுகின்றது.

மனித இனத்தின் வரலாற்றை வரவு-செலவு போலச் சரிசமனாகக் கணக்கிடமுடியாது. எனது தந்தையார் வரலாற்றை, ஒவ்வொரு நாட்டின் சம்பவங்களையும் குறிப்பிடும் சரிதமாக நினைக்கவில்லை. அவர் மனிதனின் சர்வதேச சரிதமாகவே கருதினார். இதனால் தான் புத்த பகவானின் செய்தியைப் பல்லாண்டு
களாக இந்த உலகத்
வழங்கியும், பாதுகா
வந்ததற்காக உலகம்
ங்கை மாதாவுக்குக்
மைப்பட்டிருக்கிறது.

இலங்கை-இந்திய
போதி சங்கங்களின்
பகரான அனகாரிக
பால இலங்கையில் பி
வர். இன்னோர் இலங்
ரான ஆனந்தகுமார
எமது பொதுப் பார
யத்துக்கு அளப்ப
தொண்டுகள் செய்துள்
இவர்கள் இந்திய கு
ளான ஸ்ரீ அரவிந்தர்,
திரநாத் தாகூர் போன்
களுடன் ஒப்பிடக்கூடி
கள்.

எமது நாடும் உங்
நாடும் நல்ல கலாச்
களை உருவாக்கியிரு
றன. புதிய நோக்
மத, இன சித்தாந்த
பாடுகளில்லாத பர
நல்லெண்ண அடிப்
யில் இரு நாடுகளும்
ங்கிவருகின்றன.

அசோக சக்கரவ
தமது கல்வெட்டில்,
வர்களின் மத நம்ப
களுக்கு மரியாதை
த்தவேண்டுமென்றும்,
னால் த மதத்
பெருமை தேடுவ
மற்றவர்களின் மதா
கும் சேவை செய்ய
மென்றும் குறிப்பி
ளார்.

இந்தியாவும் இலங்
சமயத்தினால் மட்டு
களை, இலக்கியம்
வற்றினால் மட்டுமல்
பிக்கை, சமூக ஒற்
அரசியல் முறைகளி
ஒற்றுமைப்பட்டுள்ள

எனது இலங்கை வி
தில் நான் நிகழ்த்துப்
லாவது பேச்சு இது.
சந்தர்ப்பத்தில் இ
க்கு நன்றி தெரிவிப்ப
முதல் கடமையாக
கிறது. நமது நாடு
கடியான கட்டத்தி
போது அங்கு 1
தொன் அரிசி ஏற்
கொண்ம ந்த இர
பல்களைத் திருப்பி
வைத்த இலங்கை
பெருந்தன்மையை
மறக்கமாட்டோம்.
கான என் மனப்பூர்
நன்றிகளை தெரி
கொள்கிறேன்.

கடந்த இரண்டு ஆ
ளாக நம் பாரதநா
னமான ஒரு பாதை
கடந்துகொண்டிருக்கி
எவ்வளவு கடினமான
னைகளாக இருந்தபோ
நம் மக்கள் அதனை
த்தேவருகிறார்கள்.
யான ஒரு காலகட்ட
தான் பாரதத்தின் ந
வது பொதுத்தேர்த
தது. இலங்கை பார்லி
டரி ஜனநாயகத்தில்
ந்த ஒரு நாடு. இதே
தான் பல்வேறு இன
வாழும் இந்தியா
சமூக அரசியல் மாற்
ஜனநாயகத்தின் மூல
ஏற்படுத்த முடியும்
தகைய சாதகமான
நிலை இருந்தாலும்
யக அமைப்பிலே எ
மெதுமெதுவாகவே
பெறும். எனினும் இ
விலே கடந்த 20
களிலே பொருள
சமூக, கலாச்சார,
துறைகளிலே புர
மான மாற்றங்கள்
டுள்ளன. இன்று
எதிர்நோக்குகின்ற
களைதீர்த்து சமுதாய
பாதையிலே தொ
துரிதமாகச் செல்
என்ற நம்பிக்கையி
கள் நாட்டில் திறன
பலர் இருக்கிறு
எனவே பொதும
வாழ்வு வளம்பெறு
நம்பிக்கை எனக்குள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...யின் பெருந்தன்மையை மறந்துவிட முடியாது'

— திருமதி இந்திரா காந்தி

இந்த உலகத்துக்கு
...யும், பாதுகாத்தும்
...ற்காக உலகம் இல
...மாதாவுக்குக் கட
...ட்டிருக்கிறது.
...லங்கை-இந்திய மகா
...சங்கங்களின் ஸ்தா
... அனகாரிக தர்ம
...இலங்கையில் பிறந்த
...இன்னேர் இலங்கைய
...ஆனந்தகுமாரசாமி
...பொதுப் பாரம்பரி
...கு அளப்பரிய
...டுகள் செய்துள்ளார்
...ள் இந்திய ஞானிக
...ஸ்ரீ அரவிந்தர், ரவீந்
...த் தாகூர் போன்றவர்
...ன் ஒப்பிடக்கூடியவர்

... நாடும் உங்களது
... நல்ல கலாச்சாரங்
... உருவாக்கியிருக்கின்
... புதிய நோக்குடன்
...இன சித்தாந்த வேறு
...ளில்லாத பரஸ்பர
...ண்ண அடிப்படை
...இரு நாடுகளும் இய
...கின்றன.
...சாக சக்கரவர்த்தி
... கல்வெட்டில், மற்ற
...ின் மத நம்பிக்கை
... மரியாதை செலு
...வேண்டுமென்றும், இத
... மதத்து...
... தேடுவ...ன்
...வர்களின் மதங்களுக்
...சேவை செய்யமுடியு
...றும் குறிப்பிட்டுள்

...தியாவும் இலங்கையும்
...த்திலுல் மட்டுமல்ல,
... இலக்கியம் போன்ற
...ஞல் மட்டுமல்ல, நம்
..., சமூக ஒற்றுமை,
...பல் முறைகளினுலும்
...மைப்பட்டுள்ளது.
...து இலங்கை விஜயத்
...ான் நிகழ்த்தும் முத
... பேச்சு இது. இந்தச்
...ப்பத்தில் இலங்கை
...ன்றி தெரிவிப்பது என்
... கடமையாக இருக்
.... நமது நாடு நெருக்
...ன கட்டத்திலிருந்த
... அங்கு 18,000
... அரிசி ஏற்றிவந்து
...ந்த இர...கப்
...திருப்பி ...ப்பி
...த இலங்கையின்
...ந்தன்மையை நாம்
...மாட்டோம். அதற்
... என் மனப்பூர்வமான
...களை தெரிவித்துக்
...கிறேன்.
...ந்த இரண்டு ஆண்டுக
... நம் பாரதநாடு கடி
...ன ஒரு பாதையைக்
...துகொண்டிருக்கின்றது
...ளவு கடினமான பிரச்
...ாக இருந்தபோதிலும்
...மக்கள் அதனைத் தீர்
...வருகிறார்கள். இப்படி
... ஒரு காலகட்டத்தில்
... பாரதத்தின் நான்கா
... பொதுத்தேர்தல் வந்
... இலங்கை பார்லிமெண்
...ஜனநாயகத்தில் முதிர்
...ரு நாடு. இதேபோல்
... பல்வேறு இன மக்கள்
...ம் இந்தியாவிலும்
... அரசியல் மாற்றங்களை
...ாயகத்தின் மூலம்தான்
...டுத்த முடியும். எத்
...ப சாதகமான சூழ்
... இருந்தாலும் ஜனநா
...மைப்பிலே எதுவுமே
... மெதுவாகவே நடை
...ம். ஏனினும் இந்தியா
... கடந்த 20 ஆண்டு
...ல பொருளாதார,
..., கலாச்சார, கல்வித்
...களிலே புரட்சிகர
... மாற்றங்கள் ஏற்பட்
...ல, இன்று எம்மை
...நோக்குகின்ற பிரச்னை
...ர்த்து சமுதாயமாற்றப்
...துயிலே தொடர்ந்து
...மாகச் செல்வோம்
... நம்பிக்கையிலே உங்
...நாட்டில் திறமை மிக்க
... இருக்கிறார்கள்.
...வ பொதுமக்களின்
...வு வளம்பெறுமென்ற
...க்கை எனக்குண்டு.

கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் இலங்கையில் பெருமளவு முன்னேற்றமான மாறுதல்கள் ஏற்பட்டிருப்பதைக் கவனிக்கக்கூடியதாக இருக்கிறது.

பத்திரிகைகளில் எமது நெருக்கடிகள் பற்றி ''இந்தியாவிலே நெருக்கடி உண்டு, குழப்பங்கள் உண்டு கொந்தளிப்பு இருக்கின்றன'' என்று செய்திகள் அடிக்கடி வெளியிடப்படுகின்றன. ஜனநாயகத்தின் வளர்ச்சியில் இவைகள் எல்லாம் ஏற்படுவது சாதாரண விஷயம். புல்லை மிதிக்க வேண்டும். அப்போதுதான் புற்றரைமீது நடக்கமுடியும். புல்லை மிதிக்காமல் புற்றரைமீது நடக்கமுடியுமா? அதுபோல்தான் சிலவற்றை ஏற்றுச் சமாளித்தே நாம் முன்னேறவேண்டியிருக்கிறது. இவைகளைத் தவிர்க்கமுடியாது. ஒரு ஜனநாயக நாடு ஏற்றுச் சமாளிக்க வேண்டியவைகள் இவை. எமது 4வது பொதுத் தேர்தலும் இப்படியானஒரு சூத்துவத்தைத் தான் எமக்குணர்த்திக் காட்டுகின்றது

ஒத்துழைப்பு உதவும்

எமது நாடுகளின் அபிவிருத்தியிலும் வளர்ச்சியிலும் நாம் ஒருவருக்கொருவர் ஒத்துழைக்கக்கூடிய துறைகள் பலவுள்ளது. நாம் படிக்கவேண்டியது எத்தனையோ உள்ளன. ஒத்துழைப்பு எமக்குப் பெரிதும் உதவும்.

இரண்டொரு விஷயங்களில் எமக்குள் சில கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டிருக்கலாம்.

இலங்கைவாழ் இந்திய வம்சாவழியினரின் பிரச்னைக்குத் தீர்வுகாணும் ஒப்பந்தமொன்றை இரு நாட்டு பிரதமர்களும் செய்துகொண்டனர். இப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம், எமது கடமைகளைச் சரிவரச் செய்வோம். இலங்கை அரசாங்கமும் எம்மைப்போல நடவடிக்கை எடுத்துவருவதுகண்டு மகிழ்ச்சிகொள்கிறேன்.

நம்மிரு நாடுகளும் நெருங்கிய உறவு கொண்டவை. சிறு பிரச்னைகள் எமது பாரம்பரிய நட்பில் குறுக்கிட அனுமதிக்கக்கூடாது. எதிர்காலத்தில் ஏற்படும் எந்தப் பிரச்னைகம் நல்லுறவுமூலமே தீர்க்கப்படவேண்டும்.

எனது விஜயமும், உங்கள் திறமைமிக்க பிரதமருடனும் இதர தலைவர்களுடனும் நடாத்தும் பேச்சுவார்த்தைகளும் பரஸ்பர நல்லுறவை ஏற்படுத்துவதுடன் கூடிய ஒத்துழைப்புக்கும் ஒற்றுமைக்கும் வழிவகுக்குமென்று நம்புகிறேன்.

நாம் எவ்வளவோ கனவு கண்டோம் — பல்லாண்டு கால அடிமைவாழ்விலிருந்து விடுதலைபெற்றபோது! ஆனுல் சில ஆண்டுகளில் நடந்தவை எமக்கு வருத்தத்தையே ஏற்படுத்துகின்றன. எம் கனவு நனவாகுமோ என்ற சந்தேகத்தைக் கிளப்பியுள்ளது.

ஆனுல் பாரத மக்களாகிய நாம் நம்பிக்கைப்பாதையில் தான் சென்றுகொண்டிருக்கிறோம். ஒருவர் பிரச்னையில் ஒருவர் தலையிடாது சமாதானமாக வாழ்ந்து, அன்பு வழியில் பிரச்னைகளைத் தீர்த்தால் என்றோ ஒருநாள் சுதந்திர ஆசியா ஏற்பட்டே தீரும். சமாதானத்துக்கும், ஒற்றுமைக்கும் இதுவே வழியாகும்.

இலங்கை பிரஜைகளாகிவிட்ட இந்திய வம்சாவழியினரும், பிரஜாவுரிமை பெறப்போபவர்களும் இலங்கையர் என்ற உணர்ச்சியைக்கொள்ள வேண்டும். இலங்கைக்கு விசுவாசமாக உழைக்கவேண்டும். இலங்கை எமது சகோதரநாடு. அதன் மீது எமக்கு அன்பும் மதிப்புமுண்டு. இரு நாடுகளுக்கும் பொதுவான பாரம்பரியமே உண்டு. இந்தப் பாரம்பரிய தொடர்பு மேலும் சிறக்க இங்குள்ள இந்தியர்கள் உள்ளன்புடன் இலங்கை முன்னேற்றத்துக்கு உழைக்கவேண்டும்.

இன்றைய பலன்

23-9-67
சனிக்கிழமை
(புரட்டாதி மாதம் 7வ)
நட்சத்திரம் - பரணி
பகல் 12-20 வரைமேல்
கார்த்திகை.

திதி- சதுர்த்தி காலை 6-11 வரை மேல் பஞ்சமி.
சுபநேரம்- 3-03—4-33
ராகுகாலம்- 9-03—10-33

மேஷம்- நடுநிலை நாட்டம், நல்லவை நடக்கும்.
ரிஷபம் - உவகைப் பெருக்கு, உற்சாகம்.
மிதுனம் - தன்னம்பிக்கை பிறக்கும், தடை நீங்கும்.
கடகம்- செயலில் இறங்கு, சிறப்பான நாள்.
சிம்மம்-ஒளிமயமான எதிர்காலம் உருவாகும் இன்று.
கன்னி-புத்திமதி கேள், பொறுமை நன்று.
துலாம்-எதிர் நீச்சல் போட்டால் ஏற்றம் உண்டு.
விருச்சிகம்- எதிர்பாராத விளைவு, ஏமாற்றம் உண்டு.
தனுசு-துன்பம் தொடரும், துயரம் வேண்டாம்.
மகரம் - சொல்வன்மை சுகம் தரும்.
கும்பம்-இனியவை நடக்கும், இனசன மகிழ்ச்சி.
மீனம்-செயலில் மந்தம் சிந்தனை அதிகம்.

—சோதிடக் கலாநிதி—
திருமலை வேலுப்பிள்ளை

மன்னாரில் பாரதிவிழா

மன்னார், வெள்ளி

''பாரதி காட்டிய வழியில் வாழ நாம் உறுதிகொள்ளவேண்டும்''.

மன்னார்த் தமிழ்க் கலாமன்றத்தினரால் மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரியில் கொண்டாடப்பட்ட ''பாரதிவிழா'' நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்து, விழாவுக்குத் தலைமை தாங்கிய மன்னார் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. என். வேதாரணியசேயோன் மேற்கண்டவாறு கூறினர்.

மன்றச் செயலாளர் திரு. பி. சிந்தாத்துரையின் ஆரம்ப உரையுடன் ஆரம்பமான இவ்விழாவில் திரு. க. கந்தசாமியின் [கரவைகிழான்] சொற்பொழிவின்போது மக்கள் கூட்டத்திடையே ஒருவித புது உணர்வையும் உற்சாகத்தையும் ஏற்படுத்துவதாக இருந்தது.

விழாவைத் தொடர்ந்து மன்னார்த் தமிழ்க் கலா மன்றத்தினரால் ''வீரத் ...'' ''... ற்கிழி'' என்னும் இரு நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன.

அழகுக்கலையின் அற்புதக்கூத்து-

கமகம என நறுமணம் வீச பூவும்பொட்டுமாக, சலசலக்கும் பலவர்ணச் சேலைகள் அணிந்துகொண்டு தமிழ் கலாச்சாரத் திருவிளக்குகளாக ஆங்காங்கே அசைந்து அசைந்து அந்தக் கன்னிகள் சென்றுகொண்டிருந்த காட்சி அழகுக்கலையின் அற்புதக்கூத்தாகவே இருந்தது. அந்தமனோஹரமான காட்சி நினைவில் பதிந்து நினைவூட்டிக்கொண்டிருக்கிறது.

'வாருங்கள், வாருங்கள்' இல்லறத்தின் இனிய பெருந்தத்துவம் இது. இதை யாழ். இந்துமகளிர் கல்லூரி மாணவிகளுக்கு எவ்வளவு தூரம் இக்கல்லூரி ஆசிரியைகள் பயில்வித்து வைத்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது அந்த ஆசிரியைகளை நெஞ்சாரப் பாராட்டாமல் இருக்கவே முடியாது முகமெல்லாம் மலர்ந்த பொலிவுடன் எல்லோரையும் ஏற்றத்தாழ்வின்றி வரவேற்ற காட்சி, கல்லூரியின் பண்பாட்டுக்கு நல்ல அத்தாட்சி.

திருமணவிழாபோல் அலங்கரிக்கப்பட்ட கல்லூரி மைதானத்தில் யாழ். இந்து மகளிர் கல்லூரி ஜி. சி. ஈ. [உயர்தர] வகுப்பு மாணவிகளின் வருடாந்த இராப் போசன விருந்து வைபவம் தலைவர் செல்வி சந்திராகுமாரி கந்தையா தலைமையில் சென்ற புதன்கிழமை இரவு ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருந்தபோது நமது சமூகப் பெண்கள் இப்பொழுது எவ்வளவு தூரம் வளர்ந்துள்ளார்கள் என அறியக்கூடியதாக இருந்தது செல்வி சந்திரா குமாரியின் உறுதி தொனிக்கும் பேச்சில் பெண்மையின் உயர்ச்சி தொனித்தது. மற்றப் பெண்கள் கல்லூரிகளின் செல்விகளும் இதனை அங்கு நிரூபித்தார்கள்.

முதலில் தமிழிலும் பின்னர் ஆங்கிலத்திலும் உரை நிகழ்த்திய பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட வடமாநில வித்தியாதிபதி திருமதி நவரத்தினம், நல்ல பெண்களாக வாழ்வதற்கு வேண்டிய நல்ல அறிவுரைகளை தொகுத்துக்கூறினர். அவரது சில அறிவுரைகளை யாவதுபின்பற்றினுல் பெண் சமூகம் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும்என்பதில் ஐயமில்லை.

'ஒறேட்டர்' சுப்பிரமணியம்குரலிலிருந்த கரகரப்பை சரிப்படுத்திக்கொண்டுதமது வழக்கமான நகைச்சுவை கலந்த ஆராய்ச்சிகளை அவிழ்த்தார். 'நான் இவ் வைபவத்தில் கலந்துகொண்டுபேச மகிழ்ச்சியடைகின்றேன்' என்றுஅவர் ஆரம்பித்தபோது 'மைக்' தடைப்பட்டதை அவதானித்த அவர் மைக் இல்லாமல் பேசுவதற்கு தாம் மகிழ்ச்சியடைவதாக தமது பேச்சில் ஒரு திருத்தத்தைச் செய்தபோது 'மைக்'காரர் உட்பட எல்லோரும் சிரிக்கவே செய்தனர். தற்காலத்தில் மைக் உபயோகம் சம்பந்தமாக நிலவிவரும் பலதரப்பட்ட கருத்துக்களை முன்வைத்தே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கலாமெனவும் எண்ணத் தோன்றியது.

ஆங்கிலத்தின் அவசியம் பற்றி அவர் வற்புறுத்திக் கூறிவிட்டு, வீட்டு மொழியையும் உலகமொழியையும் கற்றுக்கொள்ளாவிடில் தொடர்புகள் குறைந்து போகும் என எடுத்துக்கூறியது அவதானிக்கப்பட வேண்டியதொன்றே.

உயர்தர மாணவிகளின் செம்மைபற்றி பாராட்டுத் தெரிவித்த அவர் வாழ்வில் செம்மையும் சீரும் ஏற்பட மாணவிகள்மன உறுதியுடன் உழைக்கவேண்டுமெனத் தெரிவித்தார்.

இத்தனை சிறப்பாக நடைபெற்ற இந்த வைபவத்தில் எல்லோரது நெஞ்சத்திலும் ஒரு குறைமட்டும் குடிகொண்டிருந்தது எஃபதை அறியக்கூடியதாக விருந்தது வடமாநில வித்தியாதிபதியும். ஒறேட்டரும் மற்றவர்களும் இதுபற்றிச் சுட்டிக்காட்டினர்கள். தமிழ்,இந்து கலாச்சாரத்தின் விளக்காக இலங்கும் யாழ்ப்பாண இந்து மகளிர் கல்லூரியின் புதிய கல்லூரி மண்டபம் பூர்த்திசெய்யப்படாது அரைகுறையில் நிற்பதுவே அந்தக்குறை. எரிந்துகொண்டிருக்கும் விளக்குக்கு எண்ணையிட எல்லோரும் முன்வரவேண்டும்.

—கணேஷ்

புதிய அதிபர்

யாழ்ப்பாணம், வெள்ளி

அரசாங்கத்தால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணம் கோவில்வீதியில் உள்ள கட்டிடப் பயிற்சிக் கல்லூரியின் புதிய அதிபராகத் தொழில் நுட்ப நிபுணர் திரு. ஏ. சின்னத்துரை நியமனம் செய்யப்பட்டுள்ளார். கடந்த 5 மாத காலமாக இங்கு சேவையாற்றிய அதிபர் கல்முனைக்கு மாற்றப்பட்டதைத் தொடர்ந்தே புதிய அதிபர் நியமிக்கப்பட்டார்

வடபகுதியில் கட்டிடப் பயிற்சியினை அபிவிருத்தி செய்யும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரியில் கட்டிடப்படம் போடுதல், கணக்கெடுத்தல், கட்டிடப்பயிற்சி என மூன்றுபிரிவுகளாகப் போதனை அளிக்கப்பட்டு வருவது. குறிப்பிடத்தக்கது. [வி. நி]

[5-ம் கலத் தொடர்ச்சி]

வாளி. அவரைப்பற்றி தமிழுலகம் அநேகமாக அறிந்திருக்கமுடியாது. அதற்கு காரணம் தமிழுலகமல்ல, கந்தையாபிள்ளை அவர்களே தான். அவர் பேரையும் புகழையும் பட்டத்தையும் பதவியையும் அறவே வெறுத்தார். தமது பகுத்தறிவுக் கருத்துக்களை மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்பதே அவரது பேரவா. அதற்காக அவர் விசேஷமாகஏதாவது செய்யவிரும்பவில்லை. தாம் எழுதும் நூல்களிலும் கட்டுரைகளிலும் உள்ள கருத்துக்கள் மக்களுடைய மனதில் செறிந்துவிட்டாலே போதும் என்று அடிக்கடி கூறுவார்.

அவருடைய பெயருக்கு முன்னுலோ பின்னுலோ அடைமொழிகள், பகுதி விகுதிகள் எதுவுமே இல்லை. அவர் விரும்பியிருந்தால் அவர் எழுதிய எண்பது சொச்ச நூல்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வெளியீட்டுவிழா வைத்து எண்பது சொச்சப் பட்டங்களும் பதக்கங்களும் வாங்கியிருக்கலாம். அவர் வெறும் 'ந. சி. கந்தையாபிள்ளை' யாகவே கடைசி வரை வாழ்ந்தார்.

யாழ். இலக்கிய வட்டம் சென்ற வருடம் அவருக்கு பரிசில் விழா நடாத்தியது. அவர் அந்த விழாவுக்கு வரவில்லை. அவருக்காக அவருடைய உறவினர் ஒருவர் பரிசிலைப் பெற்றார்.

படாடோபமின்றி தொண்டு செய்த இத்தகைய பேரறிஞரை இனிமேல் எங்கே காணப்போகிறோம்!

— வழிப்போக்கன்

நாட்டிலும் நகரிலும்

ஒரு மாதத்துக்கு முன்புதான். வழக்கம்போல அந்த மனிதர் வந்தார். வெள்ளை வேட்டியும் வெள்ளை சட்டையும் சால்வை கிடையாது. மூக்கிலேபச்சை'கூலிங் கிளாஸ்' அவர் வருவதும் போவதும் எவருக்கும் தெரியாது. அத்தனை பதமை, அத்தனை எளிமை, அத்தனை அடக்கம்.

வந்து அருகில் மெதுவாக உட்கார்ந்தார். ஏதோ ஆராய்ச்சி கட்டுரை கொண்டுவந்திருக்கிறார் என்று எனக்குத் தெரிந்துவிடும். குசலம் விசாரித்தபின், தாம் எழுதிக்கொண்டு வந்த விஷயத்தைப்பற்றி ஒரு பூர்வாங்க சிற்றுரை செய்வார். அவர் பேசும்போதுதான் எவ்வளவு அமைதி!

அவர் ஒரு நிறைகுடம். தளம்பாதவர். கனிந்து பழுத்த அறிவுக் களஞ்சியம். சதா சிந்தனைபடர்ந்த அந்த முகத்தை இனிமேல எப்பொழுது பார்க்கப் போகிறோம்.?

காலஞ்சென்ற திரு. ந. சி. கந்தையா பிள்ளையை எனக்கு முப்பது வருடங்களுக்கு முன்பே தெரியும். கந்தரோடையில் அப்பொழுது தமிழ் வாத்தியாராக கடமையாற்றினர். அப்பொழுதும் அந்த சிந்தனை தோய்ந்த நெற்றி. அன்றிரவு தாம் வாசித்த அந்த ஆங்கில ஆராய்ச்சி நூலைப் பற்றி என்னென்ன எண்ணங்களோ, என்னென்ன நினைவுகளோ!

அப்பப்பா!

ஆனந்த குமாரசுவாமி, மாக்ஸ் முல்லர், பிளேட்டோ, நீலகண்ட சாஸ்திரி, நல்லசிவம்பிள்ளை, ராதாகிருஷ்ணன்— இப்படி எத்தனை எத்தனை மேதாவிகளுடன் அவர் இரவு பகலாக உறவுகொண்டாரோ? இன்னும் எமக்குத் தெரியாத எத்தனை வரலாற்றுவிற்பன்னர்களுடன் அளவளாவினரோ? எப்படித் தெரியும்?

ஒன்றன்பின் ஒன்ருக எண்பதுக்கு மேற்பட்ட நூல்களை எழுதித் தள்ளினர். இவற்றில் பெரும்பாலானவை தென் இந்தியாவிலேயே வெளியானவை. இந்நூல்கள் எல்லாவற்றிலும் 'தமிழனின் பெருமை' இழையோடி நிற்கும்.

தென்னிந்தியாவில் மறைமலை அடிகள், ஈ. வே. ரா. பெரியார் முதலியவர்களின் கருத்துக்களில் கந்தையாபிள்ளைக்கு ஈடுபாடு உண்டானது. தமிழரின் பழம்பெருமை பற்றியும் சைவநெறியின் மாண்புபற்றியும் உலகில் பேராசிரியர்கள் எழுதி வைத்த நூல்களையும் ஏடுகளையும் சென்னை 'கொன்னிமேரா' நூல் நிலையத்திலும், தஞ்சாவூர் சரஸ்வதி மஹால் நூல்நிலையத்திலும் இன்னும் பிறஇடங்களிலும் ஒற்றை ஒற்றையாக வாசித்து கூர்ந்து ஆராய்ச்சிகள் நடத்தினர், அவையெல்லாம் பிற்காலத்தில் தமிழ் நூல்களாக பரிமளித்தன.

தமிழுக்கும் தமிழுலகத்தாருக்கும் அவர் விட்டுவிட்டுப்போன பொக்கிஷங்கள் இவ்வரிய ஆராய்ச்சி நூல்கள்.

ந. சி. கந்தையாபிள்ளையிடம் நான் கண்டதோர் முகக்கியமான பண்பைப்பற்றியே இங்கு பிரதானமாக கூறவேண்டும். மனிதர் எளிமையின் உறைவிடம். தம்மைப்பற்றி தம்பட்டம் அடித்துக் கொள்ளாதவர். அடக்கமாகஇருந்து தமிழ்த் தொண்டு செய்த ஓர் அறி

[4-ம் கலம் பார்க்க]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்விளான் கி.மு. சங்கத்தின் சேவை

காரியாதிகாரி பாராட்டு

துணுக்காய், வெள்ளி

போக்கு வரத்து, நீர்ப்பாசனம் ஆகிய துறைகளில் இப்பகுதிவிவசாயிகள் அனுபவித்த கஷ்டங்களை கல்விளான் கிராம முன்னேற்றச் சங்கம் நீக்கியுள்ளது. அவ்வாறே நெற்பயிர்ச்செய்கையிலும் இச்சங்கம் உழைக்குமானால், அது நாட்டுக்குச் செய்யும் பெரும் சேவையாகும்' என கல்விளான் கி. மு. சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தலைமைவகித்துப்பேசிய துணுக்காய்ப் பிரிவுக் காரியாதிகாரி திரு. மு. தம்பிமுத்து குறிப்பிட்டார்.

துணுக்காய் கிராமசபைத் தலைவர் திரு. க. சோமசுந்தரம் பேசுகையில், பண்புல்லில் சங்கம் நடத்திய ஆராய்ச்சியின் பயனாக சங்கம் பாய்நெசவை ஆரம்பித்துள்ளதாகவும், இத்தொழில் கிராமத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமாக விளங்குவதாகவும் கூறினார். இவ்விஷயத்தில் சங்கத்தின் தலைவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளையும் அவர் பாராட்டினார்.

சங்கத்தலைவர் திரு. செ. மயில்வாகனம், திரு. அ. க. பொன்னம்பலம் உட்பட வேறுபலரும் பேசினர்.

மன்னார் முத்துமாரி அம்மன் கோவில்

இமையாணன், வெள்ளி

மன்னார் முத்துமாரி அம்மன் கோவிலின் வருடாந்த உற்சவத்தில் காலையில் விசேட பூசையும் மாலை கூட்டுப்பிரார்த்தனையும், பக்திப்பாடல்களும் நடைபெற்றன. நண்பகல் விசேட அன்னதானம்வழங்கப்பட்டது. இரவு நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளில் யாழ்ப்பாணத்திலிருந்து விசேடமாக வரவழைக்கப்பட்ட உடுப்பிட்டி சித்திரா மெலிலிசைக் குழுவினரின் மெல்லிசை விருந்தும், விசேட மேளக்கச்சேரியும் இடம் பெற்றன.

கொழும்பு தமிழ் வளர்ச்சிக் கழகம்

கொம்பனித்தெரு, வெள்ளி

கொழும்புதமிழ்வளர்ச்சிக் கழகத்தின் விசேட பொதுக் கூட்டம் சங்க பணிமனையில் நடைபெற்றது. அதில் நடப்பு வருட உத்தியோகஸ்தராகப் பின்வருவோர் தெரிவு செய்யப் பட்டனர்.

தலைவர்: எஸ். பெருமாள். உபதலைவர்: வி. சின்னத்துரை, செயலாளர்: எஸ். நாகேஸ்வரன், உபசெயலாளர்: பி.பாலகிருஷ்ணன், தலைகாரி: பி. அசோகன். 7 பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

12 ஆயிரம் மக்கள் பயனடைவர்

சுரும்பசிட்டி, வெள்ளி

கரவெட்டி "அத்துளு" குளத்திட்டத்தில் நிர்மாணிக்கப்பட விருக்கும் குடிநீர் விநியோகத்திட்டத்தினால் உடுப்பிட்டித் தொகுதியைச் சேர்ந்த சுமார் 12 ஆயிரம் மக்கள் பயன் பெற இருக்கின்றனர். ஏழு லட்ச ரூபா செலவில் அமைக்கப்படும் இத்திட்டத்தில் 60 ஆயிரம் கலன் நீர் கொள்ளக்கூடிய தண்ணீர்த்தாங்கி நிறுவப்படும். இக்குடி நீர் விநியோகத்தை ஒரு வருட காலத்திற்குள் பூர்த்தி செய்து வைக்கலாம் என உள்ளூராட்சி அமைச்சு எதிர் பார்க்கின்றது.

பொக்கணை நீர்ப்பாசன திட்டம்

புன்னாலைக்கட்டுவன், வெள்.

பொக்கணை நீர்ப்பாசனத்திட்டம் யாழ்ப்பாணத் திலுள்ள பெரிய திட்டங்களில் ஒன்றாகக் கணிக்கப் படுமென்றும், மின்சக்தி யால் இயங்கப்படுமென்றும் கூறினார் அபிவிருத்தி அமைச்சர் திரு சி. பி. டி. சில்வா, முன்னாள் நீர்வேலிக் கிராம சபைத் தலைவர் திரு எஸ் பி. நடராசாவுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இத்திட்டத்தின் மூலம் ஊரெழுப்பகுதிக்கும், அண்மையிலுள்ள குடியேற்றத் திட்டங்களுக்கும் நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுப்பதற்காகக் கால்வாய்கள் ஏற்கனவே கட்டப்பட்டு வருகின்றன.

"பெயரளவில்தான் சைவர்களா?"

சுன்னாகம், வெள்ளி

"சைவம் மிகத் தொன்மையான நெறி. எவன் தூய்மையான தன் நல மற்ற அன்புணர்வோடு இறைவனைத் துதிக்கின்றானோ அவனே உண்மைச் சைவன். ஆனால் இன்றைய தலைமுறையில் வாழும் எம் மவர்கள் பெயரளவிற்குன் சைவர்களாக இருக்கின்றார்களேதவிர அவர்களது செயல்கள் சிவநியல்பையும் இறை உண்மையையும் அவமதிப்பதாகவே உள்ளன."

இவ்வாறுஏழாலை தெற்கு-மேற்கு இந்து சமய விருத்திச்சங்க 9-வது ஆண்டு நிறைவு தின விழா நிகழ்ச்சியில் "மண்ணில் நல்ல வண்ணம்வாழலாம்" என்ற தலைப்பில் பேசிய பண்டித வித்துவான் ச.கந்தசாமி குறிப்பிட்டார். அவரி தொடர்ந்து உரையாற்று கையில் ஆத்மீக உணர்வு அருகி வருவது மனித சமுதாயம் அழிவை எட்டிக் கொண்டிருப்பதற்கு அறிகுறிவாகுமெனக் கூறினார்.

கடல் எல்லை விஸ்தரிப்பு நடவடிக்கை எடுக்குமாறு பட்டினசபை தீர்மானம்

காங்கேசன்துறை, வெள்ளி

இந்தியா தனது கடல் விஸ்தரிப்பை 12 மைல்களாக அதிகரிக்குமாயின் அதன் விளைவாக இலங்கை வாழ் மீனவர்கள் பெரிதும் கஷ்டப்பட வேண்டியேற்படுமென காங்கேசன்துறைப் பட்டினசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்தியக் கரையிலிருந்து 7 மைல் தொலைவிலுள்ள ஆழ்கடலிலேயே மீனபிடி இடங்கள் இருப்பதாகவும், பழங்காலந்தொட்டு நம்மவர்கள் அப்பகுதிகளிலேயே மீன்பிடித்து வருவதாகவும், இந்தியா தனது கடல் எல்லையை விஸ்தரிக்குமானால் அதனால் இலங்கை மீன்பிடியாளர்கள் குறிப்பாக மயிலிட்டிப் பகுதி மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவரென்றும், எனவே இந்தியாவின் இவ்வாக்கிரமிப்பு சம்பந்தமாக இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. இதன் பிரதிகளை பிரதமமந்திரி, மீன்பிடிமந்திரி ஆகியோருக்கும், காங்கேசன்துறை, பருத்தித்துறை, வட்டுக்கோட்டை, தீவுப்பகுதி எம். பி. க்களுக்கும் மற்றும் கரையோரப்பகுதி உள்ளூராட்சி சபைகளுக்கும் அனுப்புவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

"கல்லூரியைத் தரம் உயர்த்துக"

புன்னாலைக்கட்டுவன், வெள்.

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி பெற்றூர் ஆசிரிய சங்க-பழைய மாணவர் சங்க இணைச் செயற்கூட்டம் நேற்று முன்தினம் கல்லூரி அதிபர் திரு. சீ. சிறிநிவாசன் தலைமையில் நடைபெற்றபோது கல்விப்பகுதியைக் கேட்கும் பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"இக்கல்லூரி முதலாம் வகுப்புத் தொடக்கம் 12ம் வகுப்புவரை நடாத்தவகை செய்து விஞ்ஞானம், கலை, மற்றும் தொழில் சம்பந்தமான பாடங்களும் போதிக்கக்கூடிய வசதிகள் அடங்கிய உயர்கல்விக் கூடமாகத் தரம் உயர்த்துமாறு இச்சபை கல்விப்பகுதியை வேண்டுகிறது.

இம்முயற்சியில் சிரத்தையெடுக்கும் கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளைக்கும் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

இளம் பற்களை உரமாக வளரச் செய்யவும்

உறுதியான ஆரோக்கிய ஈறுகளுக்கும்
உரமான வெண்ணிறப் பற்களுக்கும்
என்றும் பாவியுங்கள்

போர்ஹான்ஸ்

பற்பசை



புகழ்பெற்ற பல் வைத்தியர் ஒருவரின் தனித் தயாரிப்பு முறைக்கு தயாரிக்கப்பட்டது. இதில் ஈறுகளை காக்கும் விசேட மருந்துகள் சேர்க்கப்துள்ளது.

பெரும்பாலான பற்கள் ஈறு வியாதிகளினால் இழக்கப்படுகின்றன

அரைவாசிக்கு மேற்பட்ட பெரியவர்களும் கிட்டத்தட்ட எல்லோ இளைஞர்களும் ஈறு அழுகல் காரணமாக தமது பற்களை இழக்கின்றனர் என உலகச் சுகாதார நிபுணர்கள் ஒத்துக்கொள்ளுகின்றனர். பெரும்பாலான பற்கள் அழுகியவை ஆனால் இவை ஈறு வியாதியினாலேயே இழக்கப்படுகின்றன என இவர்கள் கூறுகின்றனர்.

உறுதியான ஆரோக்கியமுள்ள ஈறுகளிலிருந்தே பிரகாசமான பற்கள் வளரும். ஈறுகள் எல்லாவற்றிற்கும் உறுதியாயும் ஆரோக்கியமாயும் இருக்கின்றனவோ அவற்றின் காரணமாகவே பற்களும் ஒளியாயும் உரமாயும் இருக்கும். போர்ஹான்ஸ் விசேடமாக ஈறுகளை உறுதியாகவும் ஆரோக்கியமாகவும் சுத்தமாகவும் இருக்கும்.

ஒரு பல்வைத்தியரின் குறிப்புக்குத் தயாரிக்கப்பட்டது போர்ஹான்ஸ்

புகழ் பெற்ற பல் வைத்தியரான டாக்டர் ஆர். ஜே. போர்ஹான்ஸ் டி. டி. எஸ். அவர்களின் தயாரிப்பு முறைக்கு ஏற்றவகையில் விசேட மருந்துகளைக் கலந்து தயாரிக்கப்பட்டது.

பொன்னும் முரசையினும் பற்களே உரமாவும் வெண்மையாயுமோ, ஈறுகளே உறுதியாவும் ஆரோக்கியமாயுமோ வைத்திருக்க முடியாது. ஈறுகளைத் தேய்த்து பற்களைச் சுத்தஞ் செய்ய போர்ஹான்ஸை போன்ற ஒரு விசேட தயாரிப்பு முறை அவசியம்.

ஆரோக்கியமான ஈறுகளிலிருந்தே உரமான பற்கள் வளரும். ஈறுகள் எல்லாவற்றிற்கும் உறுதியாயும் ஆரோக்கியமாயும் இருக்கின்றனவோ அவற்றின் காரணமாகவே பற்களும் ஒளியாயும் உரமாயும் இருக்கும். போர்ஹான்ஸ் விசேடமாக ஈறுகளை உறுதியாகவும் ஆரோக்கியமாகவும் சுத்தமாகவும் இருக்கும்.

உரம் பற்களை என்றும் இளமையுடன் காக்கவும்

உறுதியான ஆரோக்கிய ஈறுகளுக்கும்
உரமான வெண்ணிறப் பற்களுக்கும்
என்றும் பாவியுங்கள்

போர்ஹான்ஸ்

பற்பசை



புகழ்பெற்ற பல் வைத்தியர் ஒருவரின் தனித் தயாரிப்பு முறைக்கு தயாரிக்கப்பட்டது. இதில் ஈறுகளை காக்கும் விசேட மருந்துகள் சேர்க்கப்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரிகெட வீரர் சூரியகுமார்

யாழ்ப்பாணம், சனி

இலங்கையில் தலைசிறந்த கிரிக்கெட் துடுப்படி வீரரான கனகையா சூரியகுமார் இலங்கைக் கிரிக்கெட் வீரர்களுடனான கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு கொழும்பு தமிழ் யூனியனால் அழைக்கப்பட்டுள்ளார்.

தமிழ்யூனியன் கிரிக்கெட் கோஷ்டியில் முக்கிய ஆட்டக்காரராகக் கலந்து கொள்ளும் சூரியகுமார் தொடர்ந்து 3 மாதகாலம் தமிழ் யூனியன் கிரிக்கெட் போட்டிகளில்கலந்துகொள்வார்.

சென் ஜோன்ஸ் கல்லூரி கிரிக்கெட் காப்டனும், வட பிரதேச கிரிக்கெட் கோஷ்டியின் காப்டனுமாகிய சூரியகுமார் தலைசிறந்த இலங்கைக் கிரிக்கெட் வீரர் களைக்கொண்ட இ. போ. ச கோஷ்டிக்கும் தமிழ்யூனியனுக்கும் நடைபெற்ற முதலாவது போட்டியில் ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்களைப் பெற்றதுகுறிப்பிடத்தக்கது. [வி.நி]

வருடாந்த விளையாட்டுப் போட்டி முடிவுகள்

உடுப்பிட்டி, வெளிளி குருநகர் 2-ம், 3-ம் வட்டாரக் குருகுலச் சிறுவர் கழகத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் இரு தினங்கள் தொடர்ந்துநடை பெற்றன. இவ்விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு வண. கட்டளைக் குரவர் பெனற் கொன்சன்சரன் பரிசில்களை வழங்கினார். இப்போட்டிகளின் சில முடிவுகள் வருமாறு:-

25 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி: பி. ஜெயபாலன், கே. டேவிட், எஸ். பூபதி. 5 மைல் மரதன் ஓட்டப்போட்டி: ஏ.அமிர்தநாதர், ஜி. மரியநாயகம், ஜி அன்ரன். 3 மைல் நீச்சல் போட்டி: எஸ். தேவதாஸ் [55 நிமி.], எஸ். மரியதாஸ் [58 நிமி.], ஏ. துரைராசா [60 நிமி.]

'யங் லவ்வேஸ்' வெற்றி

யாழ்ப்பாணம், சனி

நல்லூர் தெற்கு சனசமூக நிலைய உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் சுண்டிக்குழி 'யங்லவ்வேஸ்' உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் 'யங்லவ்வேஸ்' கோஷ்டி 4—3 கோல்களால் வெற்றியீட்டியது.

மேற்படி சனசமூகநிலைய மைதானத்தில் நடைபெற்ற இப்பெரும் மோதலில் 'யங்லவ்வேஸ்' கோஷ்டியின் சுறுசுறுப்பான 'பாசிங்' ஆட்டம் சனசமூகநிலையக்கோஷ்டியைக் திணறடித்துக் கொண்டிருந்தது. சனசமூகநிலைய கோஷ்டியும் விட்டுக் கொடுக்காமல் பலமாக மோதிய காரணத்தால் இருசாராரும் ஒரு பெரும்பலப் பரீட்சையில் ஈடுபட்டனர்.

கட்டத்துக்குக்கட்டம் இருகோஷ்டியினரும் அடித்தடுத்து கோல்களை விளாசிக்கொண்டேயிருந்தனர். சனசமூகக் கோஷ்டியில் எஸ். உலகநாதன் ஏஸ். மரமநாதன் எஸ். முத்துராசாஆகியோர் முறையே கோல்கள் போட்டனர். யங்லவ்வேஸ் கோஷ்டியில் எஸ். சிவராசசிங்கம், எஸ். சாம் செல்வராசா, எஸ். சிவரத்தினம், எஸ் இருநீலகண்டன், ஆகியோர் அருமையாக ஆடி கோல்களைப் பெற்றனர். வி.நி)

இந்து இளைஞர் முதலிடம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண மாவட்ட சனசமூகநிலையங்களின் சமாசம் நடாத்திய இயல் இசை போட்டிகளில் பங்கு பற்றிய இளவாலை இந்து இளைஞர் சனசமூகநிலையம் சமூக நாடகப்போட்டியில் முதலிடத்தையும் இயல் பகுதி சம்பியன் ஸ்தானத்தையும் இயல்இசை போட்டிகளின் மொத்த புள்ளிகளின்படி இரண்டாவது ஸ்தானத்தையு பெற்றுக்கொண்டது. இந்நிலையம் வலிகாமம் வடக்குப் பிரிவு சனசமூகநிலையங்களுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் சம்பியனைத் தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.——

கோப்பாய், வெள்ளி

கோப்பாய்ப் பகுதியில் வீடுகளிலும், தோட்டங்களிலும் கட்டி வைக்கப்பட்டிருக்கும் விலையுயர்ந்த பல மாடுகள் சமீப நாட்களாக களவு போகின்றனவாம். இம்மாடுகள் கசாப்புக் கடைக்குக கொண்டு செல்லப்படுவதாகக் கருதப்படுகிறது. இது குறித்து இப் பகுதி மக்கள் கோப்பாய் பொலிசில் புகார் செய்துள்ளனர்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

சனி 23-9-67

[செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கதி தொலிக்கநற்சிந்தனை, 6-45 பக்திக்கோவை, 7-30 தேர்ந்தஇசை, 7-45 திரைகானம், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததினயாழ்த்துக்கள், 5-30 மாணவர்மலர்.

இரவு 6-15 வயலின்—தனதேவி சுப்பையா, 6-45 இராமசஞ்சிகை, 7-15 செய்திச்சுருள், 7-30 குங்குமம்—மாதர்நிகழ்ச்சி, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 'நவரசம்'—சித்திரம், 10-00 நேயர்விருப்பம்

நாடு திரும்பினர்

சோப்பாய், வெள்ளி

சென்ற மூன்று மாத காலம் மைசூர் பல்கலைக் கழகத்தில் கல்வெட்டு ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த கலாநிதி வேலுப்பிள்ளை நேற்று முன்தினம் இலங்கை வந்தடைந்தார்.

1. யாழை மார்க் நம்பர் 1 சிமென்ஸ்

ஒடிகொலோன் சிசு பரிபாலிப்புக்கும், நோயாளிகள் அறைக்கும், குளிக்கும் அறைக்கும். மறவாதீர்—சீமென்ஸ்.

2. சிமென்ஸ்—வாசனை செவ்வினநீர் தேங்காயெண்ணெயும், ஆலிவ் எண்ணெய் கூந்தல் வளரும் தைலமும் கொண்டுள்ள உரோமத்தை செழிப்பாகவும் சிறப்பாகவும் வளர்க்கும்.

3. சிமென்ஸ் புத்தராஜா தைலம்

தலையிடியை ஒரு நிமிடத்தில் நிறுத்திவிடும். எல்லாவிதமான தலையிடிகளுக்கும் பிரசம் சம்பந்தமான சகல நோய்களுக்கும் சிறந்த ஒளஷதம்.

இலங்கையிலுள்ள சகல பிரசித்திபெற்ற வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

சலவையின் வெண்மையை வெளிப்படுத்துவது

ரொபின் நீலம்

வீட்டிற் சலவையாகும் உடுப்புக்களை ரொபின் நீலத்தில் அலசுங்கள். அது உங்கள் உடுப்புக்களுக்கு மேலும் பளிச்சென்ற வெண்மையையும் பிரகாசத்தையும் தருகிறது.

றெக்கிற் அன் கோல்மன் தயாரிப்பு

கடுகதி பஸ் ஓட்டும் பஸ் சாரதி இவர்



குறித்த காலத்துக்குள்ளே குறிப்பிட்ட இடத்தினைப் போய்ச் சேரத் துடிக்கும் விழிப்பாய் இருந்து பஸ் ஓட்டவேண்டியவர் இவர். பஸ்ஸில் பிரயாணம் செய்யும் பிரயாணிகளின் உயிர்களெல்லாம் இவர் கையிலேதான் இருக்கின்றன. அபாயம் எதுவும் நேரிடாமல் அவ்வளவு பேரையும் கவனமாகவும் பாதுகாப்பாகவும் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டியவர் இவர். இவருடைய வேலை எவ்வளவு கடினமானது.

ஓயாது உழைப்பவர்கள், முயற்சியால் உயர்ந்தவர்கள், முன்னேறிச் செல்பவர்கள் எல்லோரும்—மனத்துக்கும் குணத்துக்குமாக—எப்பொழுதும் விரும்பிப் புகைப்பது 5 டயமண்ட் சிகரெற்.

இவரும் புகைப்பது 5 டயமண்ட் சிகரெற்

1/67 AJNS

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

போட்டி தவிர்ப்புபற்றி பேச்சு நடக்கவில்லையாம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தல் சம்பந்தமாக போட்டி தவிர்ப்பு ஒப்பந்தமொன்றைச் செய்து கொள்வதுபற்றித் தாங்கள் எவரும் பேச்சுவார்த்தை நடத்தவில்லை யென்றும் போட்டி தவிர்ப்புப்பற்றி யோசிக்கவேஇல்லையென்றும் முன்னாள் மேயர் திரு. அ. து. துரையப்பா தெரிவித்தார்.

மாநகரசபையின் தேர்தல் பற்றி இன்னும் எதுவும்முடிவாகத் தெரியாதிருக்கையில் போட்டி தவிர்ப்புப் பற்றிப் பேசுவதற்கு என்ன இருக்கிறது என்றும் திரு. துரையப்பா சொன்னார்.

தமிழ்க்காங்கிரஸ் மாநகர சபையின் சகல வட்டாரங்களிலும் அபேட்சகர்களை நிறுத்துவதெனத் தீர்மானித்திருக்கிறது. போட்டி தவிர்ப்புபற்றி எதுவித பேச்சும் நடைபெறவில்லை யெனிறு தமிழ்க் காங்கிரஸ் காரியதரிசி திரு. த. சங்கரப்பிள்ளை கூறுகின்றார்.

இந்திய தூதுகோஷ்டி விரைவில் இங்குவரும்

இந்திரா — டட்லி கூட்டறிக்கை

கொழும்பு, வியாழன்

பாரதப்பிரதமரின் இலங்கை நல்லெண்ண விஜயத்தின் இறுதி நாளான இன்று பிரதமர் திருமதி இந்திரா இலங்கைப்பிரதமர் திரு. டட்லி ஆகிய இருவரும் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் பொதுவான உலகப் பிரச்னைகள் பற்றி ஆராயப் பட்டதாகவும் இலங்கை இந்தியா ஆகிய இருநாடுகளுக்கும் பொதுவான பல விஷயங்கள் பற்றி சுமுகமான சூழ்நிலையில் ஆராயப் பட்டதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கூட்டறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இருநாடுகளுக்கிடையிலும் வர்த்தகம் பொருளாதாரம் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பு மேற்கொள்வது சம்பந்தமாகவும் உடன்பாடெதாணப்பட்டது.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் சம்பந்தமாக இதுவரை மேற்கொள்ளப்பட்டுவந்த நடவடிக்கை திருப்திகரமாக அமைந்துள்ளது. மேலும் இதுவிஷயத்தில் திருப்திகரமான நடவடிக்கை மேற்கொள்வதில் இணக்கம் ஏற்பட்டுள்ளது.

பொருளாதார ஒத்துழைப்பு பற்றி ஆராய்வதற்காக பாரதத்திலிருந்து தூதுகோஷ்டி யொன்று சிலவாரங்களில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும்.

வயல்லும் பிரச்னை சமாதான முறையில் தீர்க்கப்படவேண்டும் என்பதிலும் மேற்காசிய விவகாரத்தில் சமாதானமான முறையில் நிரந்தரத் தீர்வுகாண நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமென்பதிலும் உடன்பாடு காணப்பட்டது.

பிரதமர் டட்லிக்கு அழைப்பு

பாரதப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி தமது இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பும் சமயத்தில் இலங்கைப்பிரதமர் திரு. டட்லியை பாரதத்துக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுத்தார். இதனை திரு. டட்லி ஏற்றுக்கொண்டார்.

'பிடித்த இடத்தில் சங்கிலியைப் போட்டேன்'

மரணமானவர் கூறியதாக உபதபால் நிலைய அதிபர் சாட்சியம்

யாழ்ப்பாணம், வெள்ளி

'சம்பவம் நடந்த அன்று நான் நல்லூர் கோவிலிலிருந்து வீட்டுக்குத்திரும்பி வந்து கொண்டிருந்தேன். அப்பொழுது சட்டநாதர் கோவிலடியில் ஜனக்கூட்டமாகவிருந்தது. நான் அங்கு சென்றபோது மரணமான வரைப் பலர் பிடித்துவைத்திருந்தனர். நான் விசாரித்த போது அவர் ஒருபெண்ணின் சங்கிலியைக் களவாடியதாக அங்கு நின்றவர்கள் எனக்குச்சொன்னார்கள். அவரின் தேகமெங்கும் சேறும் மண்ணுமாகக் கிடந்தது. அவரைக் காரொன்றில் ஏற்றிப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றேன். காருக்குள்வைத்து 'சங்கிலி எங்கே' என்று நான் அவரிடம் கேட்டேன். 'சங்கிலியை நான் என்னைப் பிடித்த இடத்தில் போட்டுவிட்டேன்' என்று அவர் என்னிடம் சொன்னார்.'

இவ்வாறு இம்மாதம் 4ம் திகதி இரவு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலுள்ள பாதுகாப்பு அறையில் இறந்து கிடந்ததாக அறிவிக்கப்பட்ட கோப்பாயைச் சேர்ந்த செல்லன் செல்லத்தம்பியின் மரணம் சம்பந்தமாக நேற்று மீண்டும் நடைபெற்ற மரண விசாரணையின் போது சாட்சியமளித்த நல்லூர் உபதபால் நிலைய அதிபர் அருணாசலம் கோபாலரத்தினம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. எம். ஜமீல் இந்த விசாரணையை நடத்தினார்.

திரு. கோபாலரத்தினத்தை பொலிஸ் தரப்பில் ஆஜரான உதவிப் பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஆர். சி. தவராஜா குறுக்குவிசாரணை செய்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மஜிஸ்திரேட் மேல் விசாரணையை ஒத்திவைத்தார். [ந. நி.]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சென்கோவில் மேலவீதி 53-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இந்திராவின் அன்பளிப்பு

கொழும்பு, வியாழன்

கண்டி தலதா மாளிகைக்கு விஜயஞ்செய்த பாரதப்பிரதமர் திருமதி இந்திரா தலதா மாளிகைக்கு ரூ. 1000 நன்கொடையளித்தார்.

தலதா மாளிகையின் யானையான 'ராஜா' மரணமானதுபற்றி திருமதி இந்திராவுக்கு தெரிவிக்கப்பட்டபோது அவர் மைசூர் கொம்பு யானையொன்றைத்தாம் அனுப்பி வைப்பதாகக் கூறினார்.

பிரதமர் திருமதி இந்திரா இலங்கைப் பிரதமருக்கு காப்பி அருந்துவதற்கு உபயோகிக்கும் மேசை ஒன்றை இன்று அன்பளிப்பு செய்தார். பிரதமர் டட்லி இருமதி இந்திராவுக்கு வேலைப்பாடுகள் பொறிக்கப்பட்ட வெள்ளித்தட்டும் வேறு சில பொருள்களும் அன்பளிப்பாக வழங்கினார்.

முள்ளுக் கம்பி திருட்டு

மன்னார், வெள்ளி

வவுனியாப்பகுதியிலுள்ள முஸ்லிம் பாடசாலையொன்றின் வேலியிலுள்ள முள்ளுக்கம்பிகள் களவாடப்பட்டுள்ளன. வவுனியா வைச்சேர்ந்த பாவற்குளம் முஸ்லிம் பாடசாலையில் தான் மேற்படி களவு நடைபெற்றுள்ளது. முள்ளுக்கம்பிகளைத் துண்டுதுண்டாக நறுக்கித்திருடர்கள் களவாடியுள்ளதாகத் தெரிகிறது.

சென்றவாரம் நடைபெற்ற இந்தச்சம்பவத்தையிட்டுப்பொலிசார்புலன் விசாரித்து வருகின்றனர்.

எம்.பி.க்கு புகார் மன்னார் ஆஸ்பத்திரிநிலை

மன்னார் வெள்ளி

50 கிராமங்களைக் கொண்ட அடம்பன் பகுதி ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் போதாமையால் நோயாளிகள் திண்டாடுவதாகப் பேசிக்கொள்ளப் படுகிறது.

மன்னாரிலிருந்து சுமார் எட்டு மைல் தொலைவிலுள்ள அடம்பன் ஆஸ்பத்திரிக்கு தினசரி 100 பேருக்குக் குறையாமல் சென்று சிகிச்சை பெறுவதாகவும் இவ்வைத்திய நிலையத்தில் ஒருடி. எம். ஓவும் இரு அப்போதிக்கரிகளுமே கடமையாற்றி வருவதாகவும் டி. எம். ஓ. லீவில் சென்றுவிட்டால் அப்போதிக்கரியில் ஒருவர் வேறொரு கிராமம் சென்று வைத்திய உதவி அளிக்க வேண்டியிருப்பதாயும் மீதமாயுள்ள ஒருவர் மட்டுமே அங்கு வரும் நூற்றுக்கணக்கானோருக்குச் சிகிச்சை செய்ய வேண்டியுள்ளதாயும் இதனால் மக்கள் மிகவும் கஷ்டமடைவதாயும் கூறப்படுகிறது. இதையிட்டு சுகாதாரப்பகுதி அதிபருக்கும் மன்னார் எம்.பி.க்கும் பொது மக்கள் முறையிட்டுள்ளார்கள்.

வீட்டு வசதிகள் மந்திரிகள் மாநாடு

சென்னை, செப். 22

பல்வேறு ராஜ்யங்களைச் சேர்ந்த வீட்டு வசதிகள் மந்திரிகளின் மாநாடொன்று அடுத்த மாதம் 8, 9, 10 ந்-திகதிகளில் சென்னையில் நடைபெறவிருக்கிறது.

இம்மாநாட்டைத் தமிழக முதல் மந்திரி திரு. சி என். அண்ணாதுரை திறந்து வைப்பார்.

வீட்டமைப்புத் திட்டங்கள் பற்றியே மாநாட்டில் விவாதிக்கப்படும்.

"தமிழில் வேலைசெய்தால்

அரசாங்கம் தண்டிக்கும் என்று அஞ்சாதீர்"

உபதபாலதிபர்களுக்கு கிளிநொச்சி எம். பி. அபயம்

யாழ்ப்பாணம், சனி

'தமிழ்ப்பகுதிகளில் உள்ள தபாற்கந்தோர்களில் தமிழில் வேலைகளைச் செய்யும், உபதபால் கந்தோர் அதிபர்களை அரசாங்கம் தண்டிக்கும் எனப் பயப்படவேண்டாம். அப்படித் தண்டிக்க அரசாங்கம் முயன்றால் பெரும் நெருக்கடியான நிலைமை ஏற்படும்.'

கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இவ்விஷயமாக பிரதம தபாலதிபருடன் தான் தொடர்புகொண்டிருப்பதாகவும், அவரிடமிருந்து மறுமொழிகிடைக்கும்வரை, தமிழில் வேலைசெய்துவந்த வர்கள் தொடர்ந்து தமிழில் வேலைசெய்யும்படியும் அவர் கேட்டுள்ளார்.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த நாகேந்திரமுனை, பெரியதம்பனை ஆகிய தபாற்கந்தோர்களில், தமிழில் வேலைநடைபெற்று வந்தது. ஆங்கிலத்தில் அல்லது சிங்களத்தில் வேலைகளைச் செய்யும்படி வடபகுதி மாவட்ட அஞ்சல்நிலைய கண்காணிப் பாளர் உத்தரவிட்டிருந்தார். இதனைத்தொடர்ந்து தபாற்கந்தோர் திபர்கள் கிளிநொச்சி எம். பி. யிடம் இவ்விஷயமாக முறைப்பாடு செய்திருந்தனர்.

தமிழ்மொழி பிரச்னை விஷயமாக பிரதமருடன் விரைவில் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாகவும், அதுவரை மாவட்ட அஞ்சல் நிலைய கண்காணிப்பாளருக்கு பதிலளுப்பாமல் தாமதிக்கும்படியும், கிளிநொச்சி எம். பி. அந்த அறிக்கையில் மேலும்கூறியுள்ளார்.

சந்தேகத்தின் பேரில் பெண் கைது

மன்னார், வெள்ளி

மன்னார் பஸ் நிலையத்தில் சில பெண்கள் கெட்ட நோக்கத்துடன் நடமாடுவதாகவும், இவர்கள் மன்னரல்லாத வேறு பிரதேசங்களைச் சேர்ந்த வர்களெனவும் தெரிய வருகிறது. அண்மையில் ஒரு பெண் சில இளைஞர்களுடன் சந்தேகத்திற்கிடமான முறையில் நடந்து கொண்டதை அவதானித்த பொலிசார் அப்பெண்ணைக் கைது செய்து விளக்கமறியலில் வைத்துள்ளனர். சம்பந்தப்பட்ட இளைஞர்கள் சாமர்த்தியமாகத் தப்பிக் கொண்டதாகத் தெரிகிறது.

ஓமத்தையில் பாரதி விழா

வவுனியா, வெள்ளி

ஓமந்தை தமிழ் மகாவித்தியாலயத்தில் சென்ற வாரம் 'பாரதி விழா' கொண்டாடப்பட்டது. மகாவித்தியாலய அதிபர் திரு. சி. கந்தையா விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறியதாவது:-

"மனிதர்கள் உலகுக்குப் பாரமாக வாழ்வதில் ஒரு பயனும் இல்லை. எந்த வகையிலாவது உலகுக்குப் பயனுள்ள விதத்தில் பணி செய்ய வேண்டும். இந்த வகையில் வையத்துள்வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்ட நற் கவிஞன் நம்பாரதியெனில் அது மிகையாகாது" என்றார்.

பரிசளிப்புவிழா

யாழ்ப்பாணம், சனி

உரும்பராய் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா மேற்படி கல்லூரியின் ஆராதனா மண்டபத்தில் இம்மாதம் 26-ம் திகதி திரு. எஸ். அம்பிகைபாகன் தலைமையில் நடைபெறுமென்றும் இவ்விழாவில் வடமாகாண ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. எஸ். மகேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வாரெனவும் அறிவிக்கப்படுகிறது.

—

பீடிப்புகையிலை உற்பத்தியாளர் கஷ்டம்

யாழ்ப்பாணம், சனி

வடபகுதியிலுள்ள பீடிப்புகையிலைக் கமக்காரர்களுக்கு புகையிலைக் குறிய பணத்தை சங்கம் கடந்த 3 மாதங்களாகக் கொடுக்காததால், அவர்கள் மிகவும் கஷ்டத்திற்குள்ளாகியிருக்கின்றனர்.

பீடிப் புகையிலைக் கமக்காரர் இவ்விஷயமாக கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினத்திற்கு புகார் செய்ததை தொடர்ந்து அவர் கமத்தொழில் உணவுஅமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. மகாதேவாவுக்கு இது சம்பந்தமாகத் தெரிவித்துள்ளார்.

—

ரேடியோவில்

அங்கவீனரின் கதம்ப நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், வெள்ளி

பண்ணை அங்கவீனர்களின் கதம்ப நிகழ்ச்சியொன்று இம்மாதம் 25-ம் திகதி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனம் ஒலிபரப்பவுள்ளது.

இந்நிகழ்ச்சிகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபன அதிகாரிகள் சமூக சேவைப் பகுதியினரின் உதவியுடன் சென்ற வாரம் பண்ணை அங்கவீனர்களின் இல்லத்தில் வைத்து ஒலிப்பதிவு செய்தனர். மாலை 6-45 மணிக்கு இந் நிகழ்ச்சி இடம் பெறும்.

[வி. நி

—

இழந்த....

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தாங்களே தமிழ்மொழியைப் பயன்படுத்தாது, தமிழ் நன்கு தெரியாத தமிழ்த் தலைவர்கள் தமிழருக்காகப் போராடுகிறோம் என்று கூறுவது வேடிக்கையானது தினமும்உச்சம்மாமிசம் உண்ணும்ஒருவர்மேடையிலேறிமரக்கறிஉணவு சாப்பிடும்படி கூறுவது போன்று இருக்கிறது தமிழ்த் தலைவர்களின் செயல்.

பாரதியின் பாடல்கள் கோழைகளையும் வீரர்களாக மாற்றிவிடும். பாரதியை இளைஞர்கள் போற்றுவதால் மானமும் வீரமும் பெற்று இந்நாட்டிற்கு தொண்டாற்றுவார்கள்.

சாதிசமயப்பூசல்கள்தமிழ் மக்கள் மத்தியிலிருந்து முற்றாக ஒழியவேண்டும். தமிழ் மொழிக்காகவும், இனத்தின் மறுமலர்ச்சிக்காகவும், பொதுநல நன்மைக்காகவும் தமிழர்கள் உழைத்தாலன்றி தமிழினம் விடுதலை பெற முடியாது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org